UNIQUE Financial Accountants
Accountants and Tax Advisors
Accountancy Services for self-employed, partnership & limited companies
Our Main Services Include:
- Accountancy Services for self-employed
- Partnership and limited companies
- Accounts Preparation
- Book Keeping
- Self-Assessment
- Payroll
- VAT Returns
- Tax Consultancy
- Company Formation
- Business Plan

Special Offer
Real Time Payroll Services and Self Assessment Return all for £999 Per Year
Get your Accounts done by Professionals!!
For more information call: 020 8900 9052
Visit us: Hazel House, 1-3 Lancelot Road, Wembley HA0 2AL
Email: info@uniqueaccountants.biz

# பார்வை
PARVAI
INSEIN Tamil Newsletter/ அறிவியல் வழிகாட்டி
FREE ISSUE
மாதம் இரு வெளியீடு
Published twice a month
ISSUE 02/2018
WED, 24TH JAN 2018
1, LANCELOT ROAD, WEMBLEY, HA0 2AJ
TEL : 0208 813 1810 WEBSITE: WWW.INSEIN.CO.UK
MOB : 079 0843 7921 EMAIL: INFO@INSEIN.CO.UK

Get Your Loans Approved
Best Finance in Your Area
We Can Help you with
MORTGAGES*
Residential Mortgages
Re-mortgages
Further Advance
Buy to let
INSURANCES*
Building Insurance
Content Insurance
Life Insurance
OTHER SERVICES
Self Employment Reg
Vat Reg & Cancellation
Reference letters
Payroll Solution
BUSINESS FINANCE
Commercial Mortgage
Commercial Loans
Business Overdraft
LOANS FOR ANY PURPOSE
Secured Loans
Credit And Finance 0208 900 9090
Visit us: 1 Lancelot Parade, Lancelot Road, Wembley HA0 2AJ
Web: www.creditandfinanceltd.com
Email: creditandfinance@gmail.com

## தற்போதைய தேர்தல்களின் பின்னணியில் புதிய அரசியல் யாப்பின் எதிர் காலம்?




எதிர் வரும் பெப்ரவரி 10ம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் பல மாற்றங்களைத் தோற்றுவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தெற்கில் இடம்பெறும் தேர்தல் பிரச்சாரங்கள் மைத்திரி ரணில் தேசிய அரசு தப்பிப் பிழைக்குமா? என்ற சந்தேகங்களை எழுப்புகிறது. ஐ கே கட்சியினர் மைத்திரி தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியை மிகவும் மோசமாக திட்டி வருகின்றனர். அதே போலவே சுதந்திரக் கட்சியினரும் ஊழலைக் காரணம் காட்டி ஐ தே கட்சியை விமர்ச்சிக்கின்றனர்.

மத்திய வங்கி ஊழல் விவகாரம் மகிந்த தரப்பினருக்கு நல்ல வாய்ப்பை அளித்துள்ளது. அவர்களும் ஐ தே கட்சியை ஊழல் தொடர்பாகவும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்புத் தொடர்பாகவும் பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளனர். ஆளும் கட்சியினர் மத்தியிலே காணப்படும் பிணக்குகளும் மகிந்த தரப்பினருக்குச் சாதகமாகவே உள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல்கள் அரசாங்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாவிடினும், 2020 இல் இடம்பெறும் பொதுத் தேர்தலின் போக்கு எவ்வாறு அமையலாம்? என்பதற்கான வாக்கெடுப்பாகவே இத் தேர்தல் அமையும். மைத்திரி தரப்பினர் தேர்தல் பிரச்சாரங்களில் மகிந்த எதிர்ப்புக் கருத்துக்களே பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. தாமே சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான வாரிசுகள் எனவும், மைத்திரி தரப்பினர் ஐ.தே. கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து சுதந்திரக் கட்சியைக் காட்டிக். . . . . தொடர்ச்சி பக்கம் 4இல் . . .


ARS
Silk House
Tailoring
Fancy Jewellery
Makeup for all occasions

அனைத்து வகையாக ஆடைத்தெரிவுகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.
TEL: 0203 583 6416 - Mob: 0740 569 2257
Website: www.arssilkhouse.co.uk - Facebook: arssilkhouse
ARS Silk House, 780 Uxbridge Road, Hayes UB4 0RS

JAY VISVA SOLICITORS
Solicitors and Commissioners for Oaths
Furthering your interests
Solicitors
Mr Jeyarajan Visvalingam, MA, LLB (Hons), Solicitor
Mrs Jyothsna Somasundar BAL, LLB (Hons), Solicitor
Mr. Nesar Afsar BA. (Hons), Solicitor
Mrs. Lingeswary Balarajan Attoney at Law
Our Staff Speak
Tamil, Kannada, Hindi and Punjabi
THE LAW SOCIETY ACCREDITED Conveyancing Quality
OUR LEGAL SERVICES
Lawyers for your Business The Law Society
Civil litigation
Commercial Litigation / Disputes
Conveyancing- Commercial & Residential Property
Accident Claims
Immigration law
Wills and Probate
Liquor Licensing
Employment Law
Planning law
Family law
Neighbour Disputes
CONTACT US |0208-573-6673 | 0794-369-8335
ADDRESS| 1st Floor, 784, Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RS
Authorised & Regulated by the Solicitors Regulation Authority. SRA ID: 599586

noolaham.org | aavanaham.org

No more long queues! No more long car drives! No more carrying bags!

# Your Grocery Shopping Gone Easy Now!

Wherever you are in the UK, order all your favourite Sri Lankan "Groceries & Vegetables" from the comfort of your warm and cosy homes and get them delivered at your door step

**Believe it or not!** Now you can even order "Frozen Fish" and other "Frozen food" online!

www.elakkiaonline.com

ELAKKIA
Your convenience is our priority

Login | Search

Home | Groceries | Savouries | Frozen | Fruits & Vegetables

ELAKKIA
We are delighted to announce our new venture elakkiaonline an online shopping channel.

GROCERIES | SPICES | CURRIES & SAUCES | PICKLES & SAMBALS

VEGETABLES & FRUITS | RICE & FLOURS | HEALTH & BEAUTY | KITCHEN & TABLEWARE | SAVOURIES & FROZEN

## FREE DELIVERY*

**on all orders over £35**

Promo Code: **SIL2710**

*Free Delivery offer valid till 31 December 2015
*Terms and conditions apply.



**Save time, trouble and money!**

**www.elakkiaonline.com**

Another new venture from your favourite RUBY'S group

email: info@elakkiaonline.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SURIYA JEWELS

## சூரியா ஜீவல்ஸ்



எம்மினத்தின் நலன் கருதி 2.5% வட்டி விகிதத்தில் அடைவு வைக்கலாம்.

உங்கள் நகைகள் வேறு இடத்தில் கூடிய வட்டி விகிதத்தில் அடைவு வைக்கப்பட்டிருப்பின் எம்மை அணுகி 2.5% வட்டி விகிதத்தில் அடைவு வைக்கலாம்.



சூரியா ஜீவலஸ் அறிமுகப்படுத்தியுள்ள சேமிப்புத் திட்டத்தில் (தங்க நகை) இணைந்து நீங்களும் பயன் பெறலாம்.

### 22ct SINGAPORE GOLD

**“செய்கூலியின்றி தங்க நகை பெற எம்மை நாடுங்கள்”**

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் தங்கம் வாங்க சூரியா ஜிவலஸ்க்கு வாங்க..

**T : 0208 552 2224 | 292, HIGH STREET NORTH, EAST HAM, LONDON, E12 6SA**



Dosa Specialist

## Sarasas

South Indian Restaurant

Come and try our South Indian, Chetinard, North Indian, Indo Chinese & Sri Lankan Dishes

We cater for special occasions Indoor & Outdoor

630-634 Uxbridge Road, Hayes, Middlesex UB4 0RY

**www.sarasarestaurant.com**

**Tel No.: 0208 561 8188**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய தேர்தல்களின் பின்னணியில் புதிய அரசியல் யாப்பின் எதிர் காலம்?

பக்கம் 1இன் தொடர்ச்சி. . .

கொடுத்துள்ளதாகவும் மகிந்த தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். பதிலுக்கு 1997 இல் மகிந்த தரப்பினர் எந்த அடிப்டையில் ரணிலுடன் கூட்டு அரசு அமைக்க ஒப்பந்தம் செய்தனர்? எனவும், ஐ தே கட்சியைச் சேர்ந்த கரு ஜெயசூரியா தலைமையில் பலர் மகிந்த ஆட்சியில் பங்களித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றது எவ்வாறு? எனப் பதில் கேள்விகளை முன் வைக்கின்றனர். எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா தலைமையில் உருவான சிறீலங்கா சுதந்திரக் கட்சி காலத்திற்குக் காலம் சுயநலமிகளால் உடைக்க முயற்சிக்கப்பட்டது. ஆனால் தேசாபிமானமுள்ள மக்கள் பலமான கட்சியாக வளர்த்துள்ளனர். ஊழலற்ற, தேசிய நல்லிணக்கத்தை மேற்கொள்ளும் அரசை உருவாக்கும் உண்மையான சுதந்திரக் கட்சி தாமே என மைத்திரி தரப்பினர் விவாதிக்கின்றனர்.

மத்திய வங்கி ஊழலில் சிக்கியுள்ள ஐ தே கட்சியினர் இதற்குக் காரணம் ஜனாதிபதியின் திட்டமிட்டு ஐ தே கட்சியை அழிக்கும் நோக்கமே என அக் கட்சியின் பின்வரிசை முக்கியஸ்தர்கள் விமர்ச்சிக்கின்றனர். இத் தேர்தலின் பின்னர் ஐ தே கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் எனச் சவால் விடுகின்றனர். தற்போது ஐ தே கட்சி தரப்பில் 106 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாகவும், ஐ தே கட்சியைச் சேர்ந்த சிலர் தற்போது மகிந்த தரப்பில் காணப்படும் சிலர் இரகசியமாக ஐ தே கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. அவ்வாறானால் 7 உறுப்பினர்களைப் பெற்றுவிட்டால் மிக இலகுவாகவே 113 உறுப்பினர்களைப் பெற்று ஆட்சியை அமைக்கலாம் எனச் சவால் விடுகின்றனர்.

ஐ தே கட்சி தனியாக அரசு அமைக்கும் என அக் கட்சியின் பின் வரிசை முக்கியஸ்தர்கள் கூறுவது தற்போதைய தேசிய அரசு என்ற போர்வையைத் தூக்கி எறிவதாகும். அவ்வாறானால் புதிய அரசியல் யாப்பின் எதிர் காலம் என்ன? மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லையேல் அரசியல் அமைப்பு மட்டுமல்ல, முக்கியமான சட்ட மூலங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது போகலாம். ஐ தே கட்சியின் பிரச்சார தந்திரங்கள் நியாயமான, ஊழலற்ற, ஜனநாயக அரசைத் தோற்றுவித்தல் என்ற வாக்குறுதியிலிருந்து விலகிச் செல்வதாகவே உள்ளது.

தற்போதைய தேர்தல் நிலமைகளை அவதானிக்கும் போது ஐ தே கட்சி முதலிடத்திலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாம் இடத்திலும், மகிந்தவின் பொதுஜன மக்கள் கட்சி மூன்றாம் இடத்திலும் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் மைத்திரி தரப்பினர் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டால் அவரது ஆதரவாளர்கள் பலர் 2020 தேர்தலைக் கவனத்தில் கொண்டு மகிந்த தரப்பிற்குச் செல்லலாம் என்ற அச்சமும் உள்ளது.

இந்த இரு தரப்பினரும் தமக்குள் மோதிக் கொள்வதை ஐ தே கட்சி விரும்புகிறது. எனவே மைத்திரி தரப்பைத் தாக்குவதை நிறுத்தும்படி ரணில் தனது கட்சியினருக்கு உத்தரவிட்டுள்ளார். மகிந்த தரப்பினர் தற்போது காணப்படும் விலைவாசி உயர்வு, அபிவிருத்தி வேலைகளில் காணப்படும் தாமதம், ஐ தே கட்சியின் ஊழல் போன்றவற்றை தமது பிரச்சார உத்திகளாக முன் வைக்கின்றனர். ஆனாலும் இத் தேர்தலில் மைத்திரி தரப்பினர் பலமான சக்தியாக காணப்பட்டால் மகிந்த தரப்பினர் பலர் மீண்டும் சுதந்திரக் கட்சியை நோக்கி நகர்வார்கள். இதனால் 2020 பொதுத் தேர்தல் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பலமான தளமாக அமையும்.

பிரதான அரசியல் கட்சிகள் மத்தியிலே தற்போது எழுந்துள்ள முறுகல் நிலை பழைய அரசியல் போக்கை நோக்கி இக் கட்சிகள் சென்றுவிடுமா? என்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

இருப்பினும் இக் கட்சிகளால் தனித்து அரசு அமைக்கும் அளவிற்கு ஆசனங்களைப் பெற முடியாத நிலை உள்ளது எனவும், மீண்டும் கூட்டு அரசை நோக்கியே செல்ல நேரிடும் எனவும் அவதானிகள் கருதுகின்றனர். குறிப்பாக மைத்திரி, மகிந்த தரப்பினர் மத்தியில் இணைப்பு ஏற்பட்டால் மாத்திரமே அரசியல் சமநிலை ஏற்படலாம் எனக் கருதுகின்றனர். இதற்கிடையில் மகிந்த தரப்பினர் அடுத்த தேர்தலில் கோதபய ராஜபக்ஸவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தக் கருமங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும், அவர் தனது அமெரிக்க பிரஜா உரிமையைத் துறப்பார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் அடிப்படையில் பார்க்கும்போது சிறீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடுவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

இதே போன்ற நிலமையே ஐ தே கட்சிக்குள்ளும் காணப்படுகிறது. ரணில் தலைமையிலான அரசு மிகவும் பலவீன நிலையில் உள்ளதாகவும், அவர் ஊழலுள்ளவர்களின் பிடியில் சிக்கி பலரின் ஆலோசனைகளையும் புறக்கணித்து முடிவுகளை எடுத்தமையால் கட்சி மக்களின் ஆதரவை இழந்துள்ளது. எனவே கட்சியை முன்னெடுக்க புதிய தலைமை அவசியம் என்ற விவாதங்கள் கட்சிக்குள் எழுந்துள்ளன. சமீபத்தில் ஜனாதிபதி பொருளாதார திட்ட அமுலாக்க அமைச்சினைத் தாம் பொறுப்பெடுக்கப் போவதாக தேர்தல் கூட்டங்களில் தெரிவித்து வருவது ஐ தே கட்சிக்குள் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இது பிரதமரின் பலவீனத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இத்தனை சிக்கல்களுக்கும் மத்தியில் புதிய அரசியல் யாப்பின் மூலம் தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது சாத்தியமா? என்ற கேள்வி எழுகிறது. தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சுமந்திரன் தனது சகாக்கள் மத்தியில்
மைத்திரி தரப்பினரே சமீபத்தைய பிரச்சனைகளில் அரசிற்குள் சிக்கல்களை ஏற்படுத்தி வருவதாக செய்திகளைப் பரப்பி வருவதாக கூறப்படுகிறது. இதற்கான அடிப்படைக் காரணம் என்ன? ஐ தே கட்சியுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வரும் அவர் இரு பிரதான கட்சிகளும் இணைந்தமையால்தான் தாம் தேசிய அரசை ஆதரிப்பதாக சம்பந்தர் உட்பட இதுவரை கூறி வருகின்றனர். ஆனால் தற்போது பிரதான கட்சிகள் மத்தியில் காணப்படும் பிளவுகளின் மத்தியில் ஐ தே கட்சியை நியாயப்படுத்திச் செல்வது பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது.

புதிய அரசியல் யாப்பு வரைபுகளில் ஐ தே கட்சி தனது கட்சி நிலைப்பாடு எதுவென்பதை முன் வைக்காமல் தற்போதைய வரைபுகளை ஏற்பதாகக் கூறிச் செல்வது ஒருவகைத் தந்திரமாகும். ஏனெனில் எதிர்க்கட்சிகள் அந்த முடிவை எடுப்பதால் தமது ஆட்சியில் தீர்வைத் தந்ததாக வரலாற்றை அமைக்க முடிவு செய்கின்றனர். அது மட்டுமல்ல கூட்டமைப்பினரை எப்போதும் தமது பக்கத்தில் வைத்திருப்பதற்கு அந்த ராஜதந்திரம் பலனளிக்கும் எனவும் நம்புகின்றனர்.

ஆனால் சமீப காலமாக தாமே தனித்து ஆட்சி அமைக்கப் போவதாக ஐ தே கட்சி தேர்தல் பிரச்சாரங்களில் கூறி வருவதும், சுமந்திரன் மற்றும் சிலர் மைத்திரியைக் குறை கூறி ஐ தே கட்சிப் பக்கம் கட்சியை நகர்த்துவதும் பெரும் மோசடியாகவே உள்ளது. புதிய அரசியல் யாப்பு விவகாரம் என்பது இரு பிரதான கட்சிகள் மத்தியிலுள்ள நல்லிணக்கத்தின் அடிப்படையில் எழுவதாகும். தற்போது அவ் வரைபுகள் அரைகுறையாக உள்ள நிலையில் இப் பிளவுகளைத் தணிக்க உதவுவதற்குப் பதிலாக குறைகளைக் கசிய விடுவது ஆரோக்கியமான அணுகுமுறையாக இல்லை. ஐ தே கட்சியினர் தனித்து ஆட்சி அமைக்கப் போவதாக கூறும் வாதங்கள் கூட்டமைப்பினரின் ஆதரவுடன்தான் என்பதைச் சிங்கள ஊடகங்கள் பகிரங்கமாகக் கூறி வருகின்றன. ஆனால் தமிழ் ஊடகங்கள் இச் செய்திகளை திட்டமிட்டே இருட்டடிப்புச் செய்கின்றன.

தமிழ்ப் பகுதிகளில் காணப்படும் தேர்தல் பிரச்சாரங்கள் புதிய அரசியல் யாப்பு வழங்கும் தீர்வுகள் குறித்த விவாதமாக மாற்றப்பட்டுள்ளன. முக்கியமாக எக்கய ராஜ்ய என சிங்களத்தில் அழைக்கப்படும் பதம் ஒற்றை ஆட்சியையே குறிப்பதால் கூட்டமைப்பினர் கூறும் சமஷ்டிக் கூறுகள் அங்கு இல்லை என்ற வாதம் முன்னிலைப்பட்டுள்ளது. புதிய வரைபின் இறைமை குறித்த வாதங்களுக்கு அப்பால் எதிர் தரப்பினர் விவாதங்களை நகர்த்த விடாமல் தடுத்து வருகின்றனர். இவ் விவாதங்களில் சுமந்திரன் மட்டுமே கலந்து கொள்வதும், இதனால் அவரை நோக்கியே தனிப்பட்ட விதத்திலும், அரசியல் மட்டத்திலும் விவாதங்கள் குறி வைக்கப்படுவதும் கூட்டமைப்பின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. எந்த மூத்த தலைவரும் இவ் விவாதங்களில் இணையவில்லை.

சுமந்திரனின் தனி விளக்கங்கள் மக்கள் மத்தியில் செல்ல முடியவில்லை. ஏனெனில் பலமான எதிர்க்கருத்துக்கள் பல முனைகளிலிருந்தும் முன் வைக்கப்படுவதால் தனித்துப் பதிலளிப்பது விரயமாகவே உள்ளது. அது மட்டுமல்ல அக் கருத்துக்கள் சமூகத்திற்குள் செல்ல முடியாதவாறு எதிர்க் குரல்கள் தடுக்கின்றன. அவருக்குள்ள அரசியல் அமைப்பு விவகார கருத்துக்கள் மற்றும் அந்த அரசியல் அனுபவம் கட்சிக்குள்ளும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்த உதவவில்லை.

புதிய அரசியல் யாப்பு வரைபுகளில் மட்டுமே கவனத்தைச் செலுத்தி விவாதங்களை நகர்த்தி வரும் கூட்டமைப்பினர் அது சாத்தப்படாவிடில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? தயாரிப்பு என்ன? என்பதையும் முன்வைக்க முடியாத நிலையில் உள்ளனர். இதனால் கூட்டமைப்பிற்கு எதிரான முன்னணியாக மட்டுமே எதிரணியினர் உள்ளனர். ஆனால் இவர்களும் கூட்டமைப்பைத் தோற்கடிக்கும் எண்ணங்களைத் தவிர மாற்றுத் திட்டங்கள் எதுவுமற்றே உள்ளனர்.

இவற்றை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது ஒரு சாரார் அரசியல் யாப்பு வரைபுகளை ஆதரிப்பதற்கான வாக்கெடுப்பாகவும், மற்றொரு சாரார் யாப்பில் எதுவுமில்லை என்பதற்கான வாக்கெடுப்பாகவும் மாற்ற விழைகின்றனரே தவிர மாற்று யோசனைகள் எதுவும் அற்றவராக உள்ளனர். இவ்வாறான நிலமைகளால் மிகவும் பாதிக்கப்படவுள்ளவர்கள் சாமான்ய மக்களே. இக் கட்சிகள் தத்தமது நலன்களுக்காக மக்களை ஏமாற்றுகின்றனர். இக் கொடுமையை நன்கு புரிந்திருந்தும் அவற்றை எடுத்துரைக்காமல் மௌனமாக உள்ள ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளே பதில் கூறவேண்டியவர்கள்.

குறைந்த பட்சம் சமூக சிந்தனையுள்ள இளைஞர்கள் இத் தேர்தலில் ஈடுபடுவார்களாயின் இக் குறைபாடுகளை யதார்த்தமாக அறியவும், ஆவன மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும். எனவே இத் தேர்தலில் நல்ல சமூக விழிப்புணர்வும், ஆர்வமும் கொண்ட மனிதர்களை இத் தேர்தலில் பிரசவிக்க மக்கள் உதவ வேண்டும்.



**மதிப்பிற்குரிய மக்கள் திலகம்**
**- மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் Dr. M.G.இராமச்சந்திரன் அவர்களின் 101வது பிறந்த நாளை பார்வை நிறுவனம் நினைவு கூருகின்றது.**

இலங்கையில் பிறந்து கும்பகோணத்தை வந்தடைந்து,சினிமா உலகில் 1936ம் ஆண்டில் அடியெடுத்து வைத்தார்.

மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்.... அது முடிஞ்ச பின்னாலும் என் பேச்சிருக்கும்....

அண்ணா பல்கலைக் கழகம் அமைத்து அதற்கு ஒரு தனி கவனத்தை பெற்றுக் கொடுத்தார். இன்று அது மிகவும் புகழ் பெற்ற பல்கலைக் கழகமாக மாறி இருப்பது எம்.ஜி. யாருக்கு பெருமை சேர்க்கும் விஷயமாகும். தமிழ் பல்கலைக் கழகமும், பெண்களுக்கான தனி பல்கலைக் கழகமும் அமைத்தது அவர் ஆட்சியின் நற்செயலாகக் கருதப் படுகிறது.

1967ம் ஆண்டிலிருந்து 25 ஆண்டுகளுக்கு தமிழகத்தில் நடந்த எல்லா பொதுத் தேர்தல் முடிவுகளையும் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HAYES மாநகரில் ஒரு புதிய உதயம்

## FENIX PROPERTY SERVICES LIMITED....

அன்பான வீட்டு உரிமையாளர்களே
உங்கள் வீடுகளை விற்கவோ வாடகைக்கு விடவோ சிரமப்படுகின்றீர்களா?
கவலை வேண்டாம்...
உங்கள் அனைத்து தேவைகளையும் மிகவும் துரிதமாகவும் இலகுவாகவும் பூர்த்தி செய்ய நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

## FENIX PROPERTY SERVICES LIMITED

உங்கள் வீடுகள் HAYES, UXBRIDGE, HILLINGDON, GREENFORD, HARROW, EALING, NORTHOLT ஆகிய இடங்களில் இருந்தால்
எம்மால் இலகுவாக வாடகைக்கு அமர்த்தி தரப்படும்...



எங்கள் சேவைகள்

**LETTING:**

FREE MARKET APPRAISAL | FREE MARKETING | FREE INVENTORY
REGULAR CHECKING | PROFESSIONAL TENANTS | LOW COMMISSION

**SALES :**

FREE VALUATION | FREE MARKETING LOW COMMISSION
QUICK SALE IN MOST CASES

FENIX
PROPERTY SERVICES

## FENIX PROPERTY SERVICES LIMITED

Tel: 0208 004 1114, Web:fenixps.co.uk
976 Uxbridge Road UB4 0RL

RS Printers Ltd 07765 224 337 / 020 8782 3844


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
## - Democratic Socialist Republic of Sri Lanka

கடந்த இதழில் தொடர்ச்சி. . .

**பொருளாதாரம்**

புராதன காலந்தொட்டே நவரத்தினங்கள், யானைத் தந்தம், முத்துகள் போன்ற பொருட்களுக்குப் புகழ்பெற்ற இலங்கை, குடியேற்ற காலத்தில் கறுவா, தேயிலை, இறப்பர், தென்னை போன்ற வர்த்தக பயிர்களுக்குப் பெயர்பெற்று விளங்கியது. இலங்கைக்கு 1948யில் சுதந்திரம் கிடைத்த பின்னர், முதலாளித்துவ பொருளாதாரத்தை ஆரம்பத்தில் சிறிது காலமே பின்பற்றியபோதிலும் அது ஆசியாவிலே மிகமுன்னேற்றகரமான பற்பல சமூகநல நடவடிக்கையையும் மேற்கொண்டது.

ஆனால் 1956 ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் முழுக்க முழுக்க சமவுடமை பொருளாதாரத்தையே கைக்கொள்ளத்தொடங்கியது. 1977-ஆம் ஆண்டுக்குப் பின்னர், தனியார்மயப்படுத்தலில் ஈடுபட்டுள்ளதுடன், சந்தைப் பொருளாதாரக் கொள்கையையும், ஏற்றுமதிசார்ந்த வர்த்தகத்தையும் நோக்கி நகர்ந்துள்ளது. தற்போது அதி இயங்குநிலையில் உள்ள துறைகளாவன, உணவுப்பொருள் தயாரிப்பு, ஆடை தயாரிப்பு, உணவும், குடிவகைகளும், தொலைத் தொடர்பு, காப்புறுதி மற்றும் வங்கித் துறைகளாகும். 1996 அளவில், பெருந்தோட்டப் பயிர்கள் ஏற்றுமதியில் 20% ஐ மட்டுமே கொண்டிருந்தன (1970 இல் 93%). அதே நேரம் ஆடைகள் ஏற்றுமதியின் 63% ஆக இருந்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), 1990களில் சராசரியாக 5.5% ஆண்டு வளர்ச்சியைப் பெற்றது. வறட்சியும், சீர்கெட்டுவந்த பாதுகாப்பு நிலையும், 1996இல் வளர்ச்சியை 3.8மூ க்குத் தாழ்த்தும் வரை இது நீடித்தது. 1997 2000 காலப்பகுதியில், சராசரி 5.3மூ வளர்ச்சியோடு கூடிய பொருளாதார மீட்சி காணப்பட்டதெனினும், மின்சாரப் பற்றாக்குறை, வரவுசெலவுப் பிரச்சினைகள், உலகப் பொருளாதார மந்த நிலை, மற்றும் தொடர்ந்து வந்த உள்நாட்டுக் குழப்பங்கள் என்பவற்றால், 2001ல் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை ஒரு பொருளாதார ஒடுக்கத்தைக் காண நேர்ந்தது. எனினும் 2001ல், கையெழுத்து இடப்பட்ட, இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாகப் பொருளாதாரம் தேறி வருவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. கொழும்பு பங்கு பரிவர்த்தனை 2003ல் ஆசியாவிலேயே அதி கூடிய வளர்ச்சியைப் பெற்றிருப்பதாக அறிவித்துள்ளது.

தற்போது, தென்னாசியாவில் உள்ள முக்கிய நாடுகளிடையே அதிக தனி நபர் வருமானத்தைக் கொண்ட நாடு இலங்கையாகும்.

**இலங்கை மக்கட்சமூகம்**

இலங்கை பல்லின மக்கள் ஒன்றாக வாழும் நாடாகும். இவர்கள் பல சமயங்களைப் பின்பற்றுவதுடன், தனித்துவமான கலாச்சாரங்களையும் பேணி வருகின்றனர். பொதுவாக அனைத்தின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்த பொதும், கடந்த இரு தசாப்தங்களாக இனப்பிரச்சனை தலைவிரித்தாடுகிறது. இதனால் பல அரசியல், சமூக பிரச்சனைகள் தோன்றியுள்ளன.

**மக்கள் தொகை**

இலங்கையின் மக்கள்தொகை 20.869 (2011 ம் ஆண்டைய கணக்கெடுப்பின் படி) மில்லியன் ஆகும். இலங்கை ஒரு வளர்முக நாடாகவிருந்த போதும், வளர்ந்த நாடுகளை விஞ்சும் அளவிற்கு அதன் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாக உள்ளது. மேலும் இது மிகவுயர்ந்த வாழ்க்கை சுட்டெண்ணை கொண்டுள்ளது. இலங்கையின் ஆண்.: பெண் பால் விகிதாசாரம் 0.98 என உள்ளது, இது தென்னாசியாவில் உள்ள இதர நாடுகளுடன் ஒப்பிடும் பொது எதிர்மாறான தன்மையைக் காட்டுகின்றது.

**கல்வி**

இலங்கை மக்களின் எழுத்தறிவு 92.5% ஆகும். இது வளர்ந்துவரும் நாடுகள் வரிசையில் எழுத்தறிவில் முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்றாகும். இளைஞர்களின் எழுத்தறிவு 98% ஆக உள்ளது. கணினியியல் அறிவு வீதம் 35% ஆக உள்ளது. ஆரம்பப்பாடசாலைகளில் சேரும் மாணவர்களின் வீதம் 99மூ இலும் அதிகமாகும். இலங்கைக் கல்வித் திட்டத்தில் 9 ஆண்டுகள் கட்டாயப் பாடத்திட்டம் நடைமுறையில் உள்ளது. கி. வி. வி. கன்னங்கராவின் முயற்சியில் 1945 ஆம் ஆண்டில் இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையான கல்வி இலவசமாக வழங்கப்படும் உலகின் ஒரு சில நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இலங்கையின் கிராமப் பகுதி சிறார்களுக்குக் கல்வி வழங்குவதற்காக நாட்டின் பல பகுதிகளில் மத்திய மகா வித்தியாலயங்கள் அமைக்கும் திட்டத்தைக் கன்னங்கரா அறிமுகப்படுத்தினார். 1942 இல் மக்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்காகப் பல சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. 1980களின் இறுதியில் மாகாணசபைகள் அமைக்கப்பட்டதை அடுத்து கல்வி அமைச்சின் அதிகாரங்கள் சில மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன்படி, தேசியப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு அவை நடுவண் அரசின் கல்வி அமைச்சின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள்ளும், ஏனைய பாடசாலைகள் மாகாண அரசுகளின் கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டுவரப்பட்டன. இலங்கையில் ஏறத்தாழ 9675 அரசுப் பாடசாலைகளும், 817 தனியார் பாடசாலைகளும், பிரிவேனாக்களும் உள்ளன. 15 அரசுப் பல்கலைக்கழகங்கள் உள்ளன.



**தேசிய இனங்கள்**

இலங்கையின் பெரும்பான்மை இனம் சிங்களவர் ஆவார். இவர்கள் நாட்டின் மொத்த சனத்தொகையில் 74% மாக உள்ளனர். நாட்டின் அடுத்த முக்கிய இனமாகத் தமிழர் உள்ளார்கள். நாட்டின் சனத்தொகையில் 15.4% மான இவர்கள், இலங்கை தமிழர் மற்றும் இந்திய தமிழரென இரு பெரும் பிரிவினராகவுள்ளனர். இலங்கை தமிழர் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், இந்திய தமிழர் நாட்டின் மத்திய மாகாணம், பதுளை மாவட்டத்திலும், பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இலங்கையின் அடுத்த முக்கிய இனமாகச் சோனகர் 10% உள்ளார்கள். இவர்கள் தமிழ் பேசக்கூடியவர்களாகவும், கிழக்கு மாகாணம் மற்றும் கண்டி, கொழும்பு போன்ற இடங்களில் பெரும்பான்மையாகவும் வாழ்கின்றனர். அத்தோடு இதர இனங்களாகப் பறங்கியர் (ஐரோபிய வழிதோன்றல்கள் 1%), வேடர்கள் (காட்டு வாசிகள் 0.1%) உள்ளனர்.

**தேசிய சமயம்**

இலங்கையின் பிரதான மதங்கள் பௌத்தம் (70.19%), இந்து சமயம் (12.61%) இஸ்லாம் (9.71%) கிறிஸ்தவம் (7.45%) ஆக உள்ளன. சிங்களவர் பெரும்பாலாகத் தேரவாத பௌத்தத்தை பின்பற்றுபவர்களாகவும், தமிழர் பெரும்பாலாகச் சைவ சமயிகளாகவும் உள்ளனர். சிங்களவர்களிலும், தமிழர்களிலும் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர். சோனகர் என்ற இனத்தைச் சேர்ந்த முஸ்லிங்கள் இஸ்லாத்தை பின்பற்றுவோராகவும், பெரும்பாலும் தமிழ் பேசக்கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் பௌத்த சமயத்தை முதன்மைப்படுத்தி, அதைப் பேணுவதை அரச கடமையாக வரையறை செய்கிறது.

**தேசிய மொழிகள்**

இலங்கையின் தேசிய மொழிகளான தமிழும், சிங்களமும் நிர்வாகம், கல்வி, நீதி போன்ற துறைகளிலும், ஆங்கிலம் வணிகத்துறையிலும் பெரும்பான்மையாகப் பயன்பாட்டிலுள்ளது. 1987-ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழும், சிங்களமும் அரசுகரும மொழிகளாகவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் அரசியல்யாப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம் பரவலாக இலங்கையில் உபயோகத்தில் உள்ள போதிலும், பரங்கியர் மட்டுமே இதைத் தங்கள் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். பௌத்த சமயம் இலங்கையில் 69 வீதமாகக் காணப்படும் அதே வேளை இந்து சமயம் 12 வீதமாகவும் இஸ்லாம் 10 வீதமாகவும் கிறிஸ்த்தவம் 7 வீதமாகவும் காணப்படுகின்றது.

**சமூக கட்டமைப்பு**

குடும்ப அமைப்பு: இலங்கையில் உள்ள அனைத்து இனங்களும் மிக முக்கியமாகக் கருதும் சமூகவலகு குடும்பமே ஆகும். இதன் கூறுகளாகக் கணவன், மனைவி, பிள்ளைகள் உள்ளனர். நாட்டின் அனேக குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக இருந்த பொழுதும் தற்போது உள்ள யுத்த, பொருளாதார காரணங்களால் அணுக்குடும்பங்கள் பிரபலமாகிவருகின்றன. கூட்டு குடும்பங்களில் உறவினர்கள் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக உள்ளதுடன், குடும்பப் பிரசினைகளை சுமுகமாகத் தீர்த்தும் வைக்கின்றனர்.

இலங்கை உறவுமுறைகள் தென்னாசிய உறவுமுறைகளை ஒத்ததாகவே உள்ளன. திருமணங்கள் அனேகமாக நிச்சயிக்கப்பட்டவையாக உள்ளபோதும், காதல் திருமணங்களும் ஒத்துக்கொள்ளப்பட்டவையாகவே உள்ளன. நிச்சயிக்கும் திருமணங்கள் முதல் மைத்துனர்களுக்கிடையே அனேகமாக முடிவுசெய்யப்பட்டு வந்திருந்தாலும், தற்போது அந்நிலையில பெரிய மாற்றமேற்பட்டுள்ளது.

மிகப் பெரும்பான்மையான திருமணங்கள் ஏகதாரமணங்களாகவே அமைகின்றன. பல்தாரமணங்கள் சட்டவிரோதமானவையாகவும், சமூகத்தால் நிராகரிக்கப்பட்டவையாகவும் உள்ளன. ஆனால் செல்வந்த முஸ்லிம்கள், குடும்பங்களைப் பராமரிக்க முடியுமானால் பல மனைவிகளை மணந்து கொள்ளலாம். மேலும் மலைநாட்டு சிங்களவர்களிடையே ஒரு பெண் பல கணவர்களை மணப்பது வழக்காக உள்ளது, இதை ஆங்கிலேயர் தடைசெய்த போதும், தற்பொழும் இது சகசமாகவே உள்ளது. இவ்வழக்கு கீழ்நாட்டு சிங்களவர்களிடையேயும் ஒரு காலத்தில் நிலவியபோதும் போர்த்துகீசர் இதை அகற்றினர்கள். தமிழரிடையே இவ்வழக்கு போர்த்துகீசர் வருகைக்குமுன் நிலவியதா என்பதற்குரிய சான்றுகள் கிடைத்தில.

சாதி அமைப்பு: இலங்கை சமூக கட்டமைப்பின் அடித்தளமாகப் பிறப்பை அடிப்படையாகக்கொண்ட சாதி அதிகாரப்படிநிலையே காணப்படுகின்றது. இந்தச் சாதிக்கட்டமைப்பு சமயம், தொழில், பொருளாதாரம் போன்ற விடயங்களில் ஒருவரின் சமூக நிலையினை நிர்ணயிக்கின்றது. இவ்வமைப்பின் தோற்றத்தை வேதங்களில் வலியுறுத்தப்படும் "நான்கு வர்ண" சாதி பெரும்பிரிவுகளில் காணலாம். வேதங்களில் கூறப்படும் சாதி நெறிகளைத் தவறாகப் புரிந்து கொண்ட காரணத்தால், மத்திய காலங்களில் சமூகத்தில் சாதி அடிப்படையில் பாகுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் ஏற்படலாயின. தற்போது பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள பொழுதும், நாட்டின் அரசியலிலும், திருமணம் உட்பட்ட பல சமூக வழக்கங்களிலும் சாதி இன்னமும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது.

றோடி எனப்படும் சாதியினரே இலங்கையின் மிகக் கீழ் சாதியினர் ஆவர். சிங்கள அரசவம்சத்தில் றோடியர்கள் தோன்றிய போதும், இவர்களின் முன்னோர்கள் நரமாமிசம் உட்கொண்டமையால் இவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டனர். இவர்களைத் தீண்டுவது பெரும் குற்றமாகக் கருதப்பட்டது.

அடுத்த இதழில் தொடரும். . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HARROW INDEPENDENT COLLEGE

*School of Mathematics, Science & Economics*



Harrow Independent College

308-310 Eastcote Lane, Harrow, HA2 9AH, United Kingdom
Tel: +44 (0)208 423 6227 Mobile: +44 (0)7957 317668
www.harrowindependentcollege.co.uk

With our Individual Learning Plan (ILP)

**UNIVERSITY PREPARATION PROGRAM – (UPP)**

- GCE AS/A2 Advanced Level Courses
- UCAS application advice
- Special coaching to write expert personal statements
- Individual coaching for University interviews
- Expert career advice by industry professionals
- Small class sizes (max. 8)

Specialisation leads to

- Medicine / Dentistry
- Electrical and Electronics Engineering
- Aerospace or Aeronautical Engineering
- Econometrics
- Computer Systems Engineering
- Physical Sciences

*Expert, dedicated and committed teachers with over 20 years experience in teaching. In the past 5 years we have helped many students to secure places at top Universities.*

CALL US NOW ON
**020 8423 6227**

We are ready to help and support your child to achieve a Better and Brighter Future.

# Your Pathway to Top British Universities

edexcel Approved Centre from Pearson

UCAS We are a UCAS registered centre

ASIC ACCREDITATION SERVICE for INTERNATIONAL SCHOOLS, COLLEGES & UNIVERSITIES

We will help all students to realise their maximum potential!



## Credit and Finance Limited

1, Lancelot Road, Wembley. HA0 2AJ

வர்த்தக உரிமையாளர்களுக்கு ஓர் நற்செய்தி
புதிய கடன் வழங்கும் திட்டத்தின்படி
உங்களுக்கு கீழ்காணும் கடன் (LOAN)
வகைகளை எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**Starting Capital**
**Max up to £150.000**

**Working Capital**
**Max up to £150.000**

**Business overdraft**
**Max up to £100.000**

Merchant Finance Advance

இவை யாவும் பாதுகாப்பு ஆவணம் (UNSECURED)
இல்லாமல் பெற்றுத்தரப்படும்.

For further details call me now
Mr. S. Kumar: 07961 184 667



## Luxmi Education Centre

Luxmi Education Center

**COURSES :**

11+, Year 2, Year 3, Year 4, Year 5, Year 6, Year 7, Year 8, Year 9, Year 10, Year 11, Year 12, Year 13

- MATHEMATICS
- SCIENCE
- ENGLISH
- PHYSICS
- CHEMISTRY
- BIOLOGY



**Our specialities:**

- Easy Payment facilities
- Qualified and experience teachers
- Regular home work
- Friendly approach

Examboards:
- Edexcel
- AQA
- OCR

**VACANCY**
Part Time English Teachers
One week day and Saturday. 7 Hours per week. Payment based on their experience. Send CV to luxmieducation @gmail.com

**101 A Blyth Road, Hayes, UB3 1DB**
**0208 573 0368, Mob.: 07852810285**
www.leconline.co.uk, Email: luxmieducation@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தின் மத்தியில் தன்னிச்சையான விழிப்புணர்வு அவசியம்
## பேராசிரியர். பொன். பாலசுந்தரம்பிள்ளை



ஒரு காலத்தில் கல்வியை மூலதனமாகக் கொண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் இன்று தமிழ் மொழியைக் கற்பிப்பதற்குக்கூட ஆசிரியர்கள் இல்லை எனக் கூறி இலங்கை வட பகுதிக் கல்வி அபிவிருத்தி பிரித்தானிய அமைப்பின் அழைப்பின் பேரில் இலண்டன் உயர் குன்று முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட வட மாகாண பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர். பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தனது உரையை ஆரம்பித்தார். வட பகுதியின் இளைஞர்களின் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் பொதுவான பொருளாதார நிலமைகள் குறித்து அவரது பார்வையை அறியும் பொருட்டு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

வட மாகாண கல்வி நிலமைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவர் அவதானித்துள்ள போதிலும் அம் முன்னேற்றம் பல வகைகளில் மட்டுப்படுத்தப்படுவதாகவும் அதற்கான பிரதான காரணிகளையும் விளக்கினார். யாழ்ப்பாணத்திற்கு வெளியில் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும் குடா நாட்டிற்குள் அதிக ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளதாகவும், வெளி மாவட்டங்களுக்குச் செல்வதை வெவ்வேறு காரணங்களால் தவிர்த்து வருவதாகவும், அவ்வாறு வெளி மாவட்டங்களுக்குச் செல்பவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்வதால் அவ் ஆசிரியர்களின் முழுமையான கவனம் அல்லது சக்தி முழுமையாக கிடைப்பதில்லை என்றார்.

### கல்வி நிலமை

கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், இந்த இடைவெளியை தனியார் கல்வி நிறுவனங்கள் நிரப்புவதாகவும் தெரிவித்த அவர் இப் பாடங்களில் முன்னேற்றம் காணப்பட வேண்டுமெனில் வெளித் தலையீடு அதாவது அரச உதவிகளுக்கு வெளியில் வெளிநாட்டு உதவிகள் மூலம் குறிப்பிட்ட காலத்தில் வளர்ச்சியை ஏற்படுத்த உதவிகள் அவசியம் என்றார்.

விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக அதற்கான கல்வி பயிலும் மாணவர் தொகை குறைகிறது. எதிர் காலத்தில் அதிக வேலை வாய்ப்புகளைத் தரும் விஞ்ஞானக் கல்வி இல்லாமையால் அதிக அளவிலான வேலை வாய்ப்புகளும் தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்காமல் போய் சமூகம் உயர்ந்த நிலையை அடைவதற்குக் கால தாமதம் ஏற்படுகிறது.

வெளி மாவட்டங்களில் காணப்படும் போக்கு வரத்துப் பற்றாக்குறை, குடும்ப வருமானப் பற்றாக்குறை போன்ற காரணிகளால் மாணவர் பாடசாலைக்குச் செல்வதும் குறைந்துள்ளது. சில சமயங்களில் ஆசிரியர்கள் தமது தொழில்களைப் பாதுகாப்பதற்காக அல்லது மாணவர்களின் குடும்ப நிலமைகளை நன்கு புரிந்து கொண்ட காரணத்தால் தாமே வீடுகளுக்குச் சென்று கல்வியின் அவசியத்தை உணர்த்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் வகுப்பறைகளில் மாணவர் தொகை மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால் தற்போது மாணவர் தொகை மிகவும் குறைந்துள்ளது. சில பாடசாலைகளில் மாணவர் தொகை பற்றாக்குறையாக உள்ள நிலையிலும் இப் பாடசாலைகள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன.

இதனால் ஒரு சிறிய பிரதேசத்திற்குள் அதிக பாடசாலைகள் குறைந்த மாணவர்களுடன் இயங்கிச் செலவினம் விரயமாக்கப்படுவதோடு, ஆசிரியர்களின் பணியும் வீணடிக்கப்படுகிறது. இப் பாடசாலைகள் தொடர்ந்தும் இயக்கப்படுவதற்குக் காரணம் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் குடியேறுவார்கள் என்ற எதிபார்ப்பின் காரணமாக அவை தொடர்ந்து இயக்கப்படுகின்றன.

வட பகுதியில் உயர் கல்வி நிறுவனங்கள் அதிகம் உள்ளன. ஆனால் அக் கல்வியைப் பெறுவதற்கான மாணவர் தொகை வட பகுதியில் குறைந்துள்ளமையால் வெளி மாவட்டங்களின் மாணவர்களே அந்த இடைவெளியை அல்லது அப் பலாபலன்களைப் பெறுகின்றனர்.

பல்கலைக் கழகத்திற்கான மாணவர் அனுமதி தற்போது அதிகமாக உள்ளது. ஏனெனில் தனியார் பல்கலைக் கழகங்களும், வெளிநாட்டு கல்வி நிறுவனங்களின் வருகையும் அதிகம் காணப்படுவதால் உயர் கல்விக்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. இதனால் பல்கலைக் கழக புதுமுகத்திற்கான போட்டி குறைவாக உள்ளது. வாய்ப்புகள் அதிகம் காணப்பட்ட போதிலும் கல்வியில் உள்ள உற்சாகப் பற்றாக்குறை பிரதான காரணி எனக் குறிப்பிட்டார்.

### வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் தொழிற்துறை முதலீடுகள் வட பகுதியில் மிகவும் குறைந்துள்ளன. அங்கு உல்லாசப் பயணத்துறையை விஸ்தரிக்கும் வகையில் விருந்தினர் விடுதிகளே தற்போது அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவித்த அவர் இத் துறைக்குத் தேவையான, தகுதியான, பயிற்சியுடையவர்கள் கிடைப்பதில்லை எனவும், இதற்குக் கலாச்சார உணர்வுகளும் தடையாக இருக்கலாம் என்றார். இவ்வாறான சேவைத் துறைக்கு பல்மொழி அறிவு அவசியம். குறிப்பாக ஆங்கில அறிவு அவசியம். இம் மொழி அறிவு குறைந்துள்ளமையால் அந்த வேலை வாய்ப்புகளையும் வெளியாரே பெறுவதாகத் தெரிவித்தார். இதனால் குறிப்பாக சுகாதாரத் துறையில் தாதி வேலைகளுக்கு விண்ணப்பிப்போர் தொகை குறைந்துள்ளதைக் குறிப்பிட்டார். பல முதலீடுகள் வேலை வாய்ப்பை அதிகரிப்பனவாக இல்லை என்றார்.

பட்டதாரிகளில் பலர் கலைத்துறைகளில் பட்டங்களை வைத்திருப்பதால் விகிதாசார அடிப்படையில் கிடைக்க வேண்டிய தொழில்களையும் அரசியல் தலையீடுகள் இருந்த போதிலும், பெற முடியாதுள்ளனர். இப் பட்டதாரிகளில் 70 சதவீதத்திற்கு அதிகமானவர்கள் இளைஞர், யுவதிகள் ஆகும். அதில் பெரும்பாலோர் யுவதிகளாகும். அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்காமையால் குடும்ப வாழ்விற்குள் செல்வதைத் தள்ளிப் போடுகின்றனர். இதனால் பிறப்பு விகிதம் குறைவடைந்துள்ளதோடு, பொருளாதாரக் காரணிகளால் பிள்ளைகளின் தொகையும் ஒன்று அல்லது இரண்டாக சுருங்கி விடுகிறது.

### மீன்பிடி, விவசாயம்

விவசாயம், மீன்பிடி தொடர்பாக தெரிவிக்கையில் விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்தவதற்கான உள் கட்டுமானங்களின் பற்றாக் குறையும், உள் பிரதேசங்களுக்குள் போதிய போக்குவரத்து இல்லாமையாலும், உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளமையாலும் விவசாய வருமானம் போதியளவாக இல்லை. அதே போலவே மீன்பிடித் தொழிலில் அந்நியப் படகுகளின் போட்டியும், போரின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த மீன்பிடிச் சமூகம் பொருளாதார ரீதியில் இப் போட்டியில் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் இருப்பதாலும், சிங்கள சமூகத்தினரும் அதிக முதலீடுகளில் ஈடுபடுவதாலும் மீன்பிடி வாய்ப்புகளும் நலிந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

### சமூகம்

இத்தகைய ஒட்டு மொத்த நிலமைகளால் குடும்பங்களின் தேவைகள் பெருகிய வேளையில், வருமானம் குறைந்தமையால் குடும்பங்கள் மத்தியில் சச்சரவுகள், அமைதியின்மை, குடிபோதை, போதை வஸ்து பாவனை, திருட்டு எனச் சமூக விரோத போக்குகளின் தளங்களாக சமூகம் மாறிவருவது குறித்துக் கவலையை வெளியிட்ட அவர் இவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டம், ஓழுங்கைக் கவனிக்கும் பிரிவினரும் சரியாகச் செயற்படாததால் அவை மேலும் விரிசல் அடைந்து மேலும் பாதிப்பை எற்படுத்துகிறது.

அத்துடன் உள்நாட்டு மூலவளங்களும் சட்டத்திற்குப் புறம்பான வகையில் கொள்ளையிடப்படுகிறது. உதாரணமாக மணல் திருட்டு, பசுக்கள் திருட்டு என்பது தினசரி நிகழ்வுகளாக உள்ளதாகத் தெரிவித்தார். வெளிநாடுகளில் ஏற்பட்டு வரும் அகதிகள் தொடர்பான பிரச்சனைகளும், இறுக்கமான சட்ட மூலங்களும், வெளிநாட்டவரைத் திருமணம் செய்தும் இணைவதற்கான நீடித்த கால அவகாசமும் இளைஞர், யுவதிகள் மத்தியிலே காணப்படும் வெளிநாட்டு மோகத்தினைத் தணித்துள்ளதாக குறிப்பிட்டார்.

தமிழ்ப் பிரதேச அபிவிருத்தியில் கவனம் செலுத்துவது அவசியம் எனத் தெரிவித்த அவர் தற்போது வட பகுதியில் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி, மன்னார் கப்பல் போக்குவரத்து என்பன வளர்ந்து வரும் தமிழ்நாட்டு அபிவிருத்தியை வடக்கு கிழக்குப் பகுதியில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்க உதவலாம். இதற்குப் பொருத்தமான அரசியல் தலைமுறையும் அவசியம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MBM Solicitors



83A First Floor, South Road
Southall UB1 1SQ (Near Southall Station)

**Tel: 0203 500 2141**
Mob: 0787 076 3570 / 0775 779 7963
Email: info@mbmsolicitors.com
Web: www.mbmsolicitors.com

- விசா முடிவடைந்து சட்ட விரோதமாக தங்கியிருப்பவர்கள் மற்றும் புதிதாக அகதி அந்தஸ்து கோருபவர்கள்
- இந்த நாட்டில் பல வருடங்களுக்கு மேல் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோருக்கு வதிவிட உரிமை பெற்றுத்-தரப்படும்.
- நாடு கடத்தருக்கு எதிரான விண்ணப்பங்கள்
- பிரித்தானியா, இலங்கை பாஸ்போட் விண்ணப்பம் மற்றும் Travel Document விண்ணப்பம்.
- மாணவர் விசா நீடித்தல் மற்றும் விசா நிராகரிப்புக்புக்கு எதிராக மேன்முறையீட செய்தல் Tier 1 Tier 2 விண்ணப்பங்கள்.
- உறவினர்களை பிரித்தானியாவிற்கு நிதந்தரமாக மற்றும் விடுமுறையில் அழைப்பித்தல்.
- EEA ஐரோபிய சட்டத்தின் கீழ் உறவினர்களை அழைப்பித்தல், திருமண விண்ணப்பம் மற்றும் நிரந்தர வதிவிட விண்ணப்பம்.
- கைது செய்தல், தடுத்து வைத்தல், மற்றும் உயர் நீதிமன்ற விண்ணப்பம்.
- விவாரத்து, விபத்து மற்றும் இழப்பீடுகள் தொடர்பான விண்ணப்பங்கள்.
- பல வருடங்களாக உங்கள் விண்ணப்பம் பல்வேறு காரணங்களால் சரியான முறையில் அனுமதிக்கப்படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். ஆகவே நன்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழு தமிழ்பேசும் மக்களுக்கான இலவச ஆலோசனை சேவை வழங்கி வருகின்றனர்.

Your Dedicated Southall - Based Solicitors with Legal Excellence in All Areas of Immigration Law

Do you have any of these immigration matters to deal with?



- Asylum & Legacy Cases
- Fresh & Human Rights Application
- Deporation & Removal Matters
- Nationality & Citizenship Application
- Dependant & Settlement Applicaiton
- EEA Family, Marriage & Sponsorship
- Visa Extension & Appeal
- Divorce and Family Matters
- Accident Claim & Personal Injury

## Family Law, Asylum and Immigration & More

**Family Law**
- Divorce Matter
- Children Matter
- Financial Dispute
- Domestic Violence
- Protection Order

**Asylum And Immigration**
- Asylum Application
- Human Rights Application
- EEA Application
- Deportation Matter
- High Court Matters
- Children Application
- Spouse Application
- All kind of Appeals

**குடும்பச் சட்டங்கள்**
- விவாகரத்து வழக்குகள்
- சிறுவர் விடயங்கள்
- நிதி விடயங்கள்
- வீட்டு வன்முறைகள்
- பாதுகாப்பு விடயங்கள்

**தஞ்சம் மற்றும் குடிவரவு**
- அகதி கோரிக்கை விண்ணப்பங்கள்
- மனித உரிமை-மனிதாபிமான விண்ணப்பங்கள்
- EFA விண்ணப்பங்கள்
- தடுத்து வைப்பு விடயங்கள்
- உயர் நீதிமன்ற விடயங்கள்
- குடும்ப விசா விண்ணப்பங்கள்
- அனைத்து வகையான மேல்முறையீடுகள்

**We do all kind of Asylum and Immigration Matters**

## PERSONAL INJURY



Did you have a car accident in the last 3 years? Was not your fault?

**Call 0203 500 2141**
**for first free Consultation**

கடந்த 3 ஆண்டுகளில்
கார் விபத்து ஏற்பட்டதா?
உங்கள் தவறு இல்லையா?
இலவச ஆலோசனைக்காக
**0787 076 3570**ஐ
அழைக்கவும்.

# 0203 500 2141

## 0787 076 3570 / 0775 779 7963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாளை வீண் நாளாக்காதீர்கள்

"காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாழ்நாள் கழிவதும்
சாலும் அவ்வீசன் சலவியன் ஆகிலும்
ஏல நினைப்பவர்க்கு இன்பம் செய்தானே" பாடல் 182

காலைப் பொழுதில் கண் விழித்து எழுந்தவர்கள் நித்தம் நித்தம் மாலைப் பொழுதாகி இரவு வந்தவுடன் உறங்கப் போவதும், இப்படியே ஒவ்வொரு நாள் பொழுதும் உறங்குவதும் விழிப்பதுமாக வாழ்நாள் வீணாகக் கழிகின்றன. அருமை உடையதாகிய வாழ்வை இப்படி வீணாக்குபவர்களை இறைவன் கோபிப்பான். என்றாலும் அவனை மனம் பொருந்த நாளும் நினைந்து பணிபவர்களுக்கு அவன் நல்லருள் புரிவான்.

புலனடங்கத் தானடங்கும் போதம்

"பருஊசி ஐந்தும்ஓர் பையினுள் வாழும்
பருஊசி ஐந்து பறக்கும் விருகம்
பருஊசி ஐந்தும் பணித்தலைப் பட்டால்
பருஊசிப் பையும் பறக்கின்ற வாறே" பாடல் 183

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து புலன்களாகிய ஊசிகளும் நம் உடலாகிய ஒரு பைக்குள் வாழ்கின்றன. இந்த ஐந்து புலன்களாகிய மிருகங்களும் அடங்கி இருக்க மாட்டா. அவை தம் விருப்பத்திற்கேற்ப பறக்கும் இயல்புடையன. இந்த ஐம்புலன்களும் அடங்கி, அவற்றை அடக்கி, இவற்றைத் தம் விருப்பப்படி செயல்படாது தன்னுள் அடக்கித் தானடங்கச் செய்தால், இந்த உடல் விண்ணில் பறக்கும் வித்தை கற்கும்.

வினை வெல்ல வழி அறிக

"கண்ணதும் காய்கதி ரோனும் உலகினை
உள்நின்று அளக்கின்றது ஒன்றும் அறிகிலார்
விண்உறு வாரையும் வினைஉறு வாரையும்
எண்ணுறும் முப்பதில் ஈர்ந்துஒழிந் தாரே" பாடல் 184

இடகலை ஆகிய சந்திர கலையும், பிங்கலை ஆகிய சூரிய கலையும் உடலுள் இருந்து உயிரியக்கத்தை நடத்துகிற உண்மை ஞானத்தைப் பலரும் அறியாமலிருக்கின்றார்கள். இந்த ஞானத்தை முப்பது வயதுக்குள் அறிந்தவர்கள் வான் உலகப் பேறு பெறுவார்கள். அறியாதவர்கள் வினைப் பயனை அனுபவித்து வீழ்ந்து படுவர்.

மீண்டும் மீண்டும் பிறக்காதிருக்க

"ஒன்றிய ஈர்எண் கலையும் உடல்உற
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்புஒழி யாரே" பாடல் 185

பதினாறு கலைகளும் உடலில் பொருந்தியுள்ள உண்மை நிலையை கீழ்மக்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. உயிர்களைச் சினந்து அழிக்கின்ற காலனாகிய உருத்திர மூர்த்தி அவர்களை அழித்துக் கருப்பைக்குள் வைக்கிறான் (பிறவித் துயர் அடையச் செய்கிறான்). இவர்களும் அறிவுத் தெளிவு பெறாமல் மீண்டும், மீண்டும் பிறந்திளைத்துப் பிறவித் துயருக்கு ஆளாகின்றனர்.

பக்குவம் எய்தும் பரமானந்தம்

"எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவது அறியாமல்
எய்திய நாளில் இருந்துகண் டேனே" பாடல் 186

மனிதனாகப் பிறந்த பிறவியின் பெருமையை எண்ணி, இந்தப் பிறவியில் இளமைப் பருவம் இருக்கும் போதே இசை பாடி ஈசனைத் தொழுது பணியுங்கள். மானுடப் பிறப்பும், இளமையும் இருக்கும் போதே இறை உணர்வுக்குத் தடையாக இருந்த மன மயக்கங்களைத் தூக்கி எறிய அறியாது இருந்தவன், இதைத் தூக்கி எறியும் பக்குவ நிலை எய்திய போது, என்னுள் இருந்த பரனோடு கலந்து பேரின்பம் கண்டேன்.

உயிர் நிலையாமை

"தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற எல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி எம்பெருமான் அடி ஏத்தார்
அழைக்கின்ற போதுஅறி யார்அவர் தாமே" பாடல் 187

மரக் கிளைகளில் அழகிய இளம் தளிர்களும், குளிர்ச்சியான மலர்களும் தழைத்து வளர்ந்து மலர்கின்றன. ஆனால் இவை எல்லாம் ஒரு நாள் காய்ந்து உலர்ந்து போக, மரம் மொட்டையாகிப் பட்டுப் போகிறது. இதைக் கண்டும் உயிர் உள்ள போதே உயிர்த் தலைவன் திருவடிகளைத் தவறாது நினைத்துப் பணியாதவர்கள் எமன் அழைப்பு வந்த அந்த இறுதி நாளில் மட்டும் ஈசனை நினைத்து எண்ணுவார்களா?. அவனை எப்போதும் நினைக்க வேண்டும் என்ற மாபெரும் உண்மையை அப்போதும் இவர்கள் அறிய மாட்டார்கள்.

வினைக்கு விளைநிலம் உடல்

"ஐவர்க்கு ஒருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே" பாடல் 188

உடல், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுக்கு உரிய உடமைப் பொருளாக (விளை நிலமாக) விளைந்து கிடந்தது. பிரமன், உருத்திரன், திருமால், மகேசுவரன், சதாசிவன் ஆகிய ஐவருக்கும் நாயகனான சிவப்பரம்பொருள் ஆணை வரவே (எமன் வரவே) ஐம்பொறிகளும் உடலைக் காப்பதைக் கைவிட்டுவிட்டன. (உடல் இறந்து விட்டது)

அடுத்த இதழில் தொடரும் . .

IT'S NEVER TOO LATE TO LEARN A NEW SKILL
Hands-on training to take your skills and career to the next level
pitman training
Enrol NOW for a Pitman Training Diploma and you'll be able to start a new career and earn a good salary without building up big debts!

Pitman Courses and Diplomas
Sage 50 Accounts 2017
Sage 50 Payroll RTI
ECDL
Microsoft Office Courses
Typaz - Touch Typing
AAT Accounting - Level 2 & Level 3
Web & Graphic Design Training
Legal / Medical Secretary
Social Media Marketing Training
Business Management
IT Support Training - CCNA, MCSE
All our courses can lead to a rewarding and well-paid careers

CACHE Childcare Courses
cache
for the Children and Young People's Workforce
Childcare Level 2 Certificate
Childcare Level 3 Diploma

Teaching Assistant Level 2 Course
GCSE English Language & Literature Tuition
ESOL Entry 3 (B1) Exam Preparation Classes
Cambridge ESOL English Classes
IELTS Exam Preparation
PCO Licence - Mini Cab English Exam Preparation and Tests
Food Hygiene / Health and Safety Training
Driving Theory Test Preparation Classes
Personal Licence (Off Licence) Exam Preparation

Life in the UK
- Practice more than 1000+ Questions
- NEW - History Questions
- Language support for all our students
- Immigration consultancy support for students

- Impress employers with high level skills
- Qualify quickly with flexible learning
- Get the job you want and earn while you learn
Call us now for FREE and friendly one-to-one career advice

Microsoft IT Academy Program Member
CompTIA Authorized Partner
cache
bcs Registered Course Provider
CompTIA A+

Pitman Training Wembley 020 8903 9580
Web: pitman-training.com/wembley Email: wembley@pitman-training.net
Visit us: Hazel House, 1-3 Lancelot Road, Wembley HA0 2AL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# GANAPATHY CASH & CARRY

*For all your Groceries & Seafood*

## GANAPATHY CASH & CARRY & WINE MARKET

*For all Your Home Needs Under One Roof*

Tel: 020 87954627 | Fax: 020 89033185 | Email: stantonys@btconnect.com

- இலங்கை உணவுப்பொருட்கள்
- இந்திய உணவுப்பொருட்கள்
- பழ வகைகள்
- உடன்மரக்கறி வகைகள்
- கடலுணவுப் பொருட்கள்
- மளிகைப் பொருட்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள உங்கள் நினைவில்
என்றும் இருக்க வேண்டிய இடம்

- Fresh Vegetables
- Chilled food
- Fresh Food
- Frozen Food
- Frozen Sea Food
- Refrigerated Room for Vegetables
- Pooja Items

- Srilankan, Indian News
- Indian Grocery
- Cookware
- International Calling Cards
- Wine Mart
- Wheel Chair Access

Opening Hours:
6.00 a.m. - 12.00 p.m. (Midnight)

CAAVERI

MATHANGI

Niru Brand
நிரு பிராண்ட்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

# WINE MART

**Incorporated in the Ganapathy Chain**

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான உள்நாட்டு,
வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் குளிர்பானங்கள் கிடைக்கும்

**34-38 Ealing Road, Wembley, Middx HA0 4TL**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

அடுத்த இதழின் தொடர்ச்சி . . .




அழுத்தமான கொள்கை கோட்பாடுகளை கொண்ட நீங்கள், பகைவனுக்கும் உதவும் பரந்த மனசுக்கு சொந்தக்காரர்கள். இதுவரை ராசிக்கு 3ம் வீட்டில் அமர்ந்து உங்களை எந்த வேலையையும் எளிதில் முடிக்கும் சாமர்த்தியத்தையும், மதிப்பு, மரியாதையும் தந்து முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்ற சனிபகவான் இப்போது 19.12.2017 முதல் 26.12.2020 வரை உள்ள காலக்கட்டங்களில் சுக வீடான 4ம் வீட்டில் அமர்வதால் கொஞ்சம் அலைச்சல் இருக்கத் தான் செய்யும். எதையும் சமாளிக்கும் மனப்பக்குவத்தை பெறுவீர்கள். சொந்த ஊரை விட்டு இடம் பெயர்வீர்கள். அர்த்தாஷ்டமச் சனியாக அமர்வதால் சின்ன சின்ன வேலைகளைக் கூட அலைந்து முடிக்க வேண்டி வரும். தவிர்க்க முடியாத செலவுகள் அதிகரிக்கும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கிக் கொள்வீர்கள். தாயாப் பிள்ளையாக இருந்தாலும் வாயும், வயிறும் வேறு என்பதைப் போல எந்த விஷயத்திலும் கூட்டு வேண்டாம்.

மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். வீடு வாங்குவது, கட்டுவது கொஞ்சம் இழுபறியாகி முடியும். அதிக வட்டிக்கு கடன் வாங்குவதை தவிர்ப்பது நல்லது. எந்த சொத்து வாங்கினாலும் தாய் பத்திரத்தை சரி பார்ப்பது நல்லது. அரசு விஷயங்களில் அலட்சியம் வேண்டாம். புது வண்டியாக இருந்தாலும் கூட அடிக்கடி பழுதாகும். இரவு நேர பயணங்களில் கவனம் தேவை. விலை உயர்ந்த பொருட்கள், தங்க ஆபரணங்களை இரவல் தரவும் வேண்டாம், பெறவும் வேண்டாம். குடும்பத்தில் கணவன்மனைவிக்குள் சந்தேகத்தால் அவ்வப்போது சண்டை சச்சரவுகள் வரத்தான் செய்யும். பெரிது படுத்திக் கொள்ளாதீர்கள். தாயாருக்கு சிறு சிறு அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வரும். தாய்வழி சொத்துக்களில் சிக்கல்கள் வரக்கூடும். அரசின் அனுமதி பெறாமல் கூடுதல் தளங்கள் அமைத்து வீடு கட்ட வேண்டாம். கழிவுநீர் பிரச்சனை, மின்சார சாதனங்கள் பழுதடைதல், வேலையாட்கள் பிரச்சனையும் வந்துபோகும். எதிர்வீடு, பக்கத்து வீட்டுக்காரருடன் எந்த வம்பும் வேண்டாம். வழக்கில் தீர்ப்பு தாமதமாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த விசா கிடைத்து அயல்நாட்டுப் பயணம் சாதகமாக அமையும். பிள்ளைகள் கொஞ்சம் செலவு வைப்பார்கள். அவர்களின் நடவடிக்கையில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

சனிபகவானின் பார்வைப் பலன்கள்:
சனிபகவான் உங்கள் ராசியை பார்ப்பதால் அவ்வப்போது சோர்வு, களைப்பு வந்து நீங்கும். கண்ணிற்கு கீழ் மற்றும் கழுத்துப் பகுதியில் கருவளையம் வரக்கூடும். அவ்வப்போது கோபப்படுவீர்கள். வெளியிடங்களில் சுத்திகரிக்கப்படாத தண்ணீரை குடிக்க வேண்டாம். சனிபகவான் உங்களின் 6ம் வீட்டை பார்ப்பதால் பணவரவு அதிகரிக்கும். பழைய பிரச்னைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பீர்கள். மறைமுக எதிரிகளை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். நிலுவையிலிருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். சனிபகவான் 10ம் வீட்டை பார்ப்பதால் உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். வேலை மாறுவீர்கள். புது பொறுப்புகளும் உங்களை நம்பி தரப்படும்.

சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்:
19.12.2017 முதல் 18.01.2019 மற்றும் 12.08.2019 முதல் 26.9.2019 வரை கேதுவின் மூலம் நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். சமூகத்தில் உங்களின் அந்தஸ்து ஒரு படி உயரும். தங்க நகைகள் சேர்க்கை உண்டாகும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்திரம் 2,3,4 மற்றும் சித்திரை 1,2ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு மேலும் நற்பலன்கள் உண்டாகும். ஆனால் அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கணவன்மனைவிக்குள் விட்டுக்கொடுத்து போவது நல்லது. உங்களின் தனபாக்யாதிபதியான சுக்கிரனின் பூராடம் நட்சத்திரத்தில் 19.01.2019 முதல் 11.8.2019 மற்றும் 27.9.2019 முதல் 24.2.2020 மற்றும் 17.7.2020 முதல் 20.11.2020 வரை சனி செல்வதால் இக்காலக்கட்டத்தில் திடீர் பணவரவு அதிகரிக்கும்.

பெருந்தன்மையாக பேசி காரியம் சாதிப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். உத்திரம் 2,3,4ம் பாதம் மற்றும் அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு மேலும் நற்பலன்கள் கிடைக்கும். ஆனால் சித்திரை 1,2ம் பாதத்தில் பிறந்தவர்கள் முன்கோபம் அதிகரிக்கும். 25.2.2020 முதல் 16.7.2020 மற்றும் 21.11.2020 முதல் 26.12.2020 வரை சனிபகவான் உங்களின் ராசிக்கு விரயாதிபதியாகிய சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் முதல் பாதத்தில் செல்வதால் அரைகுறையாக நின்ற வீடு கட்டும் பணியை கட்டி முடிப்பீர்கள். சொத்து பிரச்சனை சுமுகமாக முடிவடையும். அஸ்தம், சித்திரை 1,2ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு மேலும் நற்பலன்கள் உண்டாகும். உத்திரம் 2,3,4ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தாய்வழி உறவினர்களுடன் கருத்து மோதல்கள் உருவாகும்.

சனிபகவானின் வக்ர சஞ்சாரம்:
29.4.2018 முதல் 11.9.2018 மற்றும் 12.8.2019 முதல் 13.9.2019 வரை மூலம் நட்சத்திரத்தில் சனி வக்ரமாவதால் பிள்ளைகளின் வருங்ககாலம் குறித்து ஒரு வித பயம் உண்டாகும். விலையுயர்ந்த தங்க நகைகளை கவனமாக கையாளுங்கள். சனிபகவான் 10.5.2019 முதல் 11.8.2019 மற்றும் 27.7.2019 முதல் 13.9.2019 மற்றும் 17.7.2020 முதல் 16.9.2020 வரை பூராடம் நட்சத்திரத்தில் வக்கரிப்பதால் இக்காலக்கட்டத்தில் குடும்பத்தாருடன் கலந்தாலோசிக்காமல் எந்த ஒரு முக்கிய முடிவுகளும் எடுக்க வேண்டாம். 02.5.2020 முதல் 16.7.2020 வரை உத்திராடம் நட்சத்திரத்தில் சனி வக்ரமாகி செல்வதால் வாகனத்தில் செல்லும் போது கவனத்தை சிதறவிடாதீர்கள். தாயாரின் உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள். வியாபாரத்தில் கறாராக இருங்கள். யாராக இருந்தாலும் கையில காசு வாயில தோசைன்னு சொல்லிடுங்கள். போட்டிகள் அதிகரிக்கத்தான் செய்யும். வாடிக்கையாளர்களை கனிவாக நடத்துங்கள்.

கடையை கொஞ்சம் அழகுபடுத்துவீர்கள். மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனங்கள் மூலம் விபரீத லாபம் உண்டாகும். பங்குதாரர்களிடையே அவ்வப்போது வாக்குவாதங்களும், கருத்து மோதல்களும் வந்தாலும், கடைசியில் உங்கள் வார்த்தைக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்வார்கள். வேலையாட்களை முழுமையாக நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், மூலிகை வகைகளால் அதிக ஆதாயம் அடைவீர்கள். உத்யோகத்தில் சூழ்ச்சிகளை தாண்டி முன்னேறுவீர்கள். பணிகளை முடிப்பதில் அலட்சியம் காட்டாதீர்கள். மேலதிகாரிகள் உங்களை குறைக்கூறினாலும் அமைதியாக ஏற்றுக் கொள்ளுவது நல்லது. முக்கிய பதிவேடுகளை கவனமாக கையாளுங்கள். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். சக ஊழியர்களுடன் ஈகோ பிரச்னைகள் வந்து நீங்கும்.

உங்களை வழக்கில் சிக்க வைக்க சிலர் முயல்வார்கள். சம்பள பாக்கியை போராடி பெறுவீர்கள். ஏமாற்றங்களும், மறைமுக அவமானங்களும் அவ்வப்போது வந்து செல்லும். கடின உழைப்பால் பதவி உயர்வு, சம்பள உயர்வு பெறுவீர்கள். கணினி துறையினருக்கு பார்வை கோளாறு வந்து நீங்கும். புதிய சலுகைகள் கிடைக்கும். கன்னிப் பெண்களே! காதல் வலையில் இப்போது சிக்கிக் கொள்ளாதீர்கள். உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். பெற்றோரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். புதியவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். கல்யாணம் தடைபட்டு முடியும். மாணவமாணவிகளே! விளையாட்டைக் குறைத்து படிப்பில் அக்கறை செலுத்துங்கள். தெரியாதவற்றை வகுப்பாசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அலட்சியப் போக்குடன் கடைசி நேரத்தில் படிக்கும் பழக்கம் இனி வேண்டாம். கலைத்துறையினர்களே! யாரையும் விமர்சித்துப் பேசாதீர்கள். தெலுங்கு, ஹிந்தி பேசுபவர்களால் புது வாய்ப்பு வரும். இந்த சனிப்பெயர்ச்சி மனப்பக்குவத்துடன் புதிய அணுகுமுறையில் பயணிக்க வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகாரம் :தஞ்சாவூர், திருவையாறு அருகேயுள்ள திருப்பூந்துருத்தி புஷ்பவனநாதரை தரிசித்து வாருங்கள். தந்தையிழந்த பிள்ளைக்கு உதவுங்கள்.




அடுக்கடுக்காக தோல்வி வந்தாலும் அஞ்சாமல் அதிரடியாக செயல்பட்டு வெற்றி இலக்கை எட்டும் வேங்கைகளே! ஏறக்குறைய ஏழரை ஆண்டுகளாக உங்களை சனிபகவான் ஆட்டிப்படைத்தாரே. அதிலும் கடந்த இரண்டரை ஆண்டுகளாக 2ம் வீட்டில் அமர்ந்து பேச்சால் பல பிரச்னைகளில் சிக்க வைத்து உங்களை கேளிக்கையாக்கி, கேள்விக்குறியாக்கிய சனிபகவான் இப்போது 19.12.2017 முதல் 26.12.2020 வரை உள்ள காலகட்டங்களில் 3ம் வீட்டில் அமர்வதால் தொட்டதெல்லாம் துலங்கும். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேர்வீர்கள். எதையும் முதல் முயற்சியிலேயே முடித்துக் காட்டுவீர்கள். தாழ்வு-மனப்பான்மை நீங்கி தன்னம்பிக்கை துளிர்விடும். இழந்த செல்வம், செல்வாக்கை எல்லாம் மீண்டும் பெறுவீர்கள்.

எப்போது பார்த்தாலும் நோய், மருந்து, மாத்திரை, எக்ஸ்ரே, ஸ்கேன் என்று அலைந்து கொண்டிருந்த நீங்கள், இனி ஆரோக்யம் அடைவீர்கள். நடைப்பயிற்சி, யோகா, தியானம் என்று மனதை பக்குவப்படுத்திக் கொள்வீர்கள். குடும்பத்தில் எப்போது பார்த்தாலும் கூச்சல், குழப்பம் என்று நிம்மதியில்லாமல் தத்தளித்தீர்களே, இனி ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம் தான். அழகிய வாரிசு உருவாகும். வயசு ஏறிக் கொண்டே போகிறதே! ஒரு வரன் கூட அமையவில்லையே என்று வளர்ந்து நிற்கும் உங்கள் பெண்ணை பார்த்து நீங்கள் வருத்தப்படாத நாளே இல்லை. நீங்கள் எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும்.

சொந்த பந்தங்கள் வியக்கும்படி திருமணத்தை முடிப்பீர்கள். அடிக்கடி இனி வீடு மாற்றத் தேவையில்லை. கையில், கழுத்தில் இருந்ததைப் போட்டு, கடனை உடனை வாங்கி சொந்த வீட்டில் குடிபுகுவீர்கள். பலரின் உள்மனசில் என்ன நினைக்கின்றார்கள் என்று புரிந்து கொள்ளாமல் வெளிப்படையாக, வெகுளியாக பேசி சிக்கிக் கொண்டீர்களே! இனி எதிலும் கறாராக இருப்பீர்கள். யாரோ செய்த தவறால் நீங்கள் தலைமறைவானீர்களே, வழக்கில் இனி வெற்றிதான். கடனை நினைத்தும் நடுங்கினீர்களே, கல்யாணம் கிரகபிரவேசத்தில், எல்லாம் உங்களை யாரும் கண்டு கொள்ளாமல் இருந்தார்களே, இனி எல்லோரும் ஆச்சர்யப்படும்படி சாதிப்பீர்கள். பலரும் வலிய வந்து பேசுவார்கள். வி.ஐ.பிகள் அந்தஸ்து பெறுவீர்கள்.

சனிபகவானின் பார்வைப் பலன்கள்:
சனிபகவான் உங்களின் ஐந்தாம் வீட்டை பார்ப்பதால் பூர்வீகச் சொத்தை மாற்றியமைப்பீர்கள். பிள்ளைகளின் உயர்படிப்பு, திருமணத்திற்காக அதிகம் செலவு செய்வீர்கள். சிலசமயங்களில் பிள்ளைகள் பிடிவாதமாக நடந்து கொண்டு உங்களை டென்ஷன்படுத்துவார்கள். சனிபகவான் உங்களின் 9ம் வீட்டை பார்ப்பதால் சமூகத்தில் அந்தஸ்து உயரும். தந்தையாருடன் ஆரோக்யமான விவாதங்கள் வந்து செல்லும். சொத்து விவகாரங்களில் கவனம் தேவை. அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சனிபகவான் உங்களின் 12ம் வீட்டை பார்ப்பதால் ஆழ்ந்த உறக்கம் இல்லாமல் போகும். மகான்கள், சித்தர்களின் தொடர்பு கிடைக்கும்.

சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்:
19.12.2017 முதல் 18.01.2019 மற்றும் 12.08.2019 முதல் 26.9.2019 வரை கேதுவின் மூலம் நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் இழுபறியாக இருந்த வேலைகள் உடனே முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். போட்டியில் வெற்றி பெறுவீர்கள். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். செலவினங்கள் கட்டுக்கடங்காமல் போகும். யாருக்கும் சாட்சிக் கையெழுத்து போட வேண்டாம். கோவில் விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். உங்களின் ராசிநாதனாகிய சுக்கிரனின் பூராடம் நட்சத்திரத்தில் 19.01.2019 முதல் 11.8.2019 மற்றும் 27.9.2019 முதல் 24.2.2020 மற்றும் . . . .

பக்கம் 13இல் தொடர்ச்சி . . .

பக்கம் 12இன் தொடர்ச்சி . . . 17.7.2020 முதல் 20.11.2020 வரை சனி செல்வதால் எதிலும் வெற்றி, எதிர்பாராத பணவரவு உண்டு.

கூடாப்பழக்க வழக்கம் நீங்கும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்தில் முதலீடு செய்வீர்கள். அண்டை மாநிலக் கோவில்களுக்குச் சென்று வருவீர்கள். மகளுக்கு திருமணம் கூடி வரும். விலகியிருந்த மூத்த சகோதரங்கள் விரும்பி வந்து பேசுவார்கள். 25.2.2020 முதல் 16.7.2020 மற்றும் 21.11.2020 முதல் 26.12.2020 வரை சனிபகவான் சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் முதல் பாதத்தில் செல்வதால் யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை உரிய நேரத்தில் செலுத்தப் பாருங்கள்.

சனிபகவானின் வக்ர சஞ்சாரம்:
29.4.2018 முதல் 11.9.2018 மற்றும் 12.8.2019 முதல் 13.9.2019 வரை மூலம் நட்சத்திரத்தில் சனி வக்ரமாவதால் பூமி சேர்க்கையுண்டாகும். மனைவிக்கு வேலைக் கிடைக்கும். சனிபகவான் 10.5.2019 முதல் 11.8.2019 மற்றும் 27.7.2019 முதல் 13.9.2019 மற்றும் 17.7.2020 முதல் 16.9.2020 வரை பூராடம் நட்சத்திரத்தில் வக்கரிப்பதால் வீண் விமர்சனங்களை தவிர்க்கப் பாருங்கள். வெளிவட்டாரத்தில் நிதானித்து செயல்படுவது நல்லது. 02.5.2020 முதல் 16.7.2020 வரை உத்திராடம் நட்சத்திரத்தில் சனி வக்ரமாகி செல்வதால் கெடு பலன்கள் குறைந்து நல்லது நடக்கும். வியாபாரத்தில் இனி கடையை நவீன மயமாக்குவீர்கள். பொறுப்பில்லாத வேலையாட்களை மாற்றுவீர்கள். அனுபவமிகுந்த புது வேலையாட்கள் அமைவார்கள்.

விளம்பர யுக்திகளை சரியாகக் கையாண்டு பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். திடீர் லாபம் அதிகரிக்கும். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். அயல்நாட்டு தொடர்புடனும் வியாபாரம் செய்வீர்கள். சினிமா, பதிப்புத்துறை, ஹோட்டல், கிரானைட், டைல்ஸ், மரவகைகளால் ஆதாயமடைவீர்கள். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. அரசாங்கக் கெடுபிடிகள் குறையும். உத்யோகத்தில் பிரச்னை தந்த மேலதிகாரி மாற்றப்படுவார். தடைபட்ட பதவி உயர்வு உடனே கிடைக்கும். சம்பள பாக்கியும் கைக்கு வரும். சிலருக்கு அதிக சம்பளத்துடன் கூடிய புது வேலை அமையும். வழக்கு சாதகமாகும். சக ஊழியர்கள் மதிப்பார்கள். எதிர்ப்புகள் நீங்கும்.

கணினி துறையில் இருப்பவர்களுக்கு வேலைபளு அதிகமானாலும் அதற்குத்தகுந்த சம்பள உயர்வும் உண்டு. கன்னிப் பெண்களே! தடுமாறிக் கொண்டிருந்த உங்கள் மனசு தெளிவடையும். தடைபட்ட கல்வியை தொடர்வீர்கள். பெற்றோருடன் இருந்த் மனத்தாங்கல் நீங்கும். வெளிநாட்டில் வேலை, மேற்கல்வி அமையும். மாணவமாணவிகளே!

மதிப்பெண் உயரும். கலை, விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துக் கொண்டு வெற்றிப் பெறுவீர்கள். சோம்பல், விரக்தி நீங்கும். கலைத்துறையினர்களே! கிசுகிசுத் தொந்தரவுகள், வதந்திகளெல்லாம் நீங்கும். உங்களின் படைப்புகளுக்கு அரசு விருது அளிக்கும். மறைந்து கிடந்த உங்களின் திறமை வெளிப்படும். இந்த சனிப்பெயர்ச்சி பழைய பிரச்னைகளை களையெடுப்பதுடன் வாழ்வின் புது அத்தியாயத்தை தொடங்குவதாக அமையும்.

பரிகாரம் :காஞ்சிபுரம் காமாட்சியை தரிசித்து வாருங்கள். பசுவிற்கு அகத்திக்கீரை கொடுங்கள்.

அடுத்த இதழில் தொடரும் . . .

FACE
TRT
தமிழ் ஒலி
உலக தமிழ்களை ஒன்றிணைக்கும் வானொலி
ஐரோப்பாவின் முதல் 24 மணிநேர தமிழ் வானொலி
ரிஆர்ரி தமிழ் ஒலி

ஐரோப்பாவின் 24 மணிநேர முதல்
தமிழ் வானொலி எனும் பெயர் பெற்ற
**France Paris** தளமாகக்கொண்டு இயங்கும்
**TRT** தமிழ் ஒலி 14.01.2018 அன்று
தனது 21 வயதில் காலடி பதித்துள்ளது.

அவ்வானொலி மென்மேலும் பல சிறப்புக்களுடன்
இயங்க பார்வை சார்ந்து அதன் நிர்வாகம் மனம்
நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன்
அவ்வானொலியில் ஊதியம் பெறாது அர்பணிப்புடன்
அறிவிப்பாளர்களாக பணியாற்றும் அத்தனை
தமிழ் உறவுகளுக்கும் எங்களுடைய சிரம்
தாழ்த்திய நன்றியை உரிமையுடன் வெளிப்படுத்திக்
கொள்கிறது பார்வை.

இத் தமிழ் வானொலி இயங்குவதற்கு ஆதரவளிக்கும்
அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

SHIVA SHAKTHI ASTROLOGY

Pandith: Sai Ram
SPIRITUAL HEALER
World famous Indian Astrologer
from 9 Generations
30 Years of Experience

ASTROLOGY PREDICTION IS GOD'S GIFT, PASSED DOWN FROM GENERATION TO GENERATION.
Expert in elimination and kind of Black Magic. Complete knowledge of Numerology, Face Reading, Palmistry from Generation to Generation.- Contact us to kown about your Past, Present and Future.
Removes Black Magic and Evil Spirits and gives Protection
VEDIC SOLUTIONS ARE AVAILABLE FOR:
Health, Family, Marriage, Love, Business, Court cases, Education, Jadu, Divorce, Children, Promotion, Voodo, Husband and wife relationship, Obeav, And many more..!
100% Guarantee
We can recommend Lucky numbers for all Lotteries
We give suitable solutions for all problems
PRIVATE AND CONFIDENTIAL
We can speak: Hindi, Telugu, English and Tamil
All Religions welcome
Any problems cleared within 9 days
Office Hours: 7 Days a week 10.00AM-8.00PM
Unit 12, Chandani Bazar, 29/33, Ealing Road, Wembley, Middlesex LONDON - HA0 4YA United Kingdom
CALL FOR AN APPOINTMENT
07404 261 999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாளன் சூப்பர் மார்கெட்
# ELLALAN SUPERMARKET

**234-236 London Rd, West Croydon, Croydon CR0 2TF**

## 020 8681 7485














**உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து விதமான**
**இந்திய மற்றும் இலங்கை மரகறிகள், இறைச்சி வகைகள்,**
**கடல் உணவுவகைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் மிகவும்**
**குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்**

noolaham.org | aavanaham.org

## விலகுங்கள் அல்லது விலக்குவோம்



பிணைமுறி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையைச் சுட்டிக் காட்டி, பிரதமர் பதவி விலக வேண்டும் அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் விலக்கப்படுவார் என்று பிவித்துரு ஹெல உருமய கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில், 18இல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அக்கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கலந்துகொண்டார். பிணைமுறி வழங்கலில் மத்திய வங்கி முன்னாள் தலைவர் அர்ஜுன மகேந்திரன் தலையிடவில்லை என 2015ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் திகதி பாராளுமன்றில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியிருப்பதாக அறிக்கையின் 854ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இது உண்மைக்குப் புறம்பானது.

இவ்வாறான தவறான தகவல்களைத் தெரிவித்து பாராளுமன்றை பிழையாக வழிநடத்திச் சென்றிருக்கிறார் பிரதமர். இதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று அவர் பதவி விலக வேண்டும். இல்லையேல், அவருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து பதவி விலகச் செய்வோம். அவருக்கெதிரான பிரேரணையைக் கொண்டுவருவதற்கு, மேற்படி அறிக்கையில் அவர் தெரிவித்திருக்கும் கூற்றே போதுமானது. இவ்வாறு உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

## மைத்திரியின் நாடகம் மிகச்சிறப்பானது!



ஜனாதிபதியின் நாடகம் இன்று மிகச்சிறப்பாக அரங்கேற்றப்பட்டு வருகின்றது. ஊழல் வாதிகளை தண்டிப்பதாக மேடையில் சவால் விடுத்தாலும் அமைச்சரவையில் ஊழல் வாதிகளுடன் கைகோர்த்தே ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்தார். கோதபாய ராஜபக் ஷவின் வேலைத்திட்டங்களை இலங்கை மக்கள் எவரும் மறந்துவிடக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரச்சாரக்கூட்டதின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் கடந்த காலங்களில் கொழும்பு மிகவும் அழகான பராமரிக்கப்பட்டது. எமது ஆட்சியில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக் ஷவின் செயற்திட்டங்களின் கீழ் மிகச்சிறந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. கோத்தாபய ராஜபக் ஷவின் வேலைத்திட்டங்கள் எதையும் இலங்கை மக்கள் எவரும் மறந்துவிடக்கூடாது. எனினும் இன்று கொழும்பின் நிலைமை மிகவும் மோசமானதாக உள்ளது. அபிவிருத்திகள் அனைத்துமே தடைப்பட்டுள்ளது. சரியான வழிநடத்தல் ஒன்று இல்லாமையே இதற்குக் காரணமாகும். ஆகவே இப்போது மக்கள் எடுக்கும் தீர்மானமே அடுத்த கட்டமாக நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்ல ஆரம்பமாக அமையும். மக்கள் விட்ட தவறை சரிசெய்யும் இன்னொரு வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது. அதில் மக்களின் தீர்மானமே நாம் எமது போராட்டத்தை அரசாங்கத்திட்கு எதிராக மாற்றியமைக்கவும் அடிப்படையாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அதிகாரத்தில் உள்ளவர்களும் தேர்தல் சட்டத்தை மீறாது செயற்படுங்கள்



மக்களுக்கு அழுத்தம் கொடுக்கும் அரசியல் பிரசாரங்களை எவரும் முன்னெடுக்க வேண்டாம். அதிகாரத்தில் உள்ளவர்களும் தேர்தல் சட்டத்தை மீறாது செயற்படவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பிக்கின்றது. வாக்காளர்கள்

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமது உரிமைகளை தவறவிடக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டார். தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும். ஏனைய அரச காரியா லயங்கள், இராணுவ முகாம்கள், தேசிய பாடசாலைகளில் அரச அதிகாரிகளின் தபால் மூல வாக்களிப்பு 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் இடம்பெறும் அதேபோல் குறித்த நாட்களில் தபால் மூல வாக்களிப்பை செய்ய முடியாத நபர்களுக்கு பெப்ரவரி 1 ஆம் மற்றும் 2ஆம் திகதிகள் வாக்களிக்கும் வாய்ப்புகள் வழங்கப்படும். இவை மாவட்ட செயலகத்தில் மாத்திரமே நடைபெறும். வாக்கெண்ணும் பணிகளை கண்காணிக்க அரசியல் கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியும். ஒரு கட்சியின் அல்லது குழுவின் சார்பில் ஒரு நபரே கண்காணிப்பு நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முடியும். அதேபோல் வாக்கெண்ணும் காரியாலயத்தின் யாரும் கட்சிகள், சுயேச்சைக்குழு சார்பில் கடமையாற்ற முடியாது.

மேலும் உத்தியோகபூர்வ வாக்களர் அட்டைகளை உரிய இடங்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளை வழங்க ஆரம்பித்துள்ளோம். நாளையும் சில காரியாளையங்களுக்கு வழங்கப்படும். அரசியல் கட்சிகள் அதிகாரத்தில் இருக்கும் கட்சிகள் தமது அதிகாரங்களை பயன்படுத்தி தேர்தல் சட்டங்களை மீற வேண்டாம் என்பதை நாம் ஆரம்பத்தில் இருந்தே தெரிவித்து வருகின்றோம். அதேபோல் அரச சொத்துக்களை பயன்படுத்தவோ அல்லது துஷ்பிரயோகம் செய்யவோ வேண்டாம். அதேபோல் மக்களும் பொருட்களை வாங்கும் நோக்கத்தில் சொற்ப தேவைகளுக்காக வாக்களிக்கவும் வேண்டாம். மக்களும் தேர்தல் சட்டத்தை சரியாக கையாள வேண்டும், தேர்தல் இடம்பெற 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் தேர்தல் பிரச்சார செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் மத தளங்களில் மத நிகழ்வுகளில் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுக்க வேண்டாம்.

தேர்தல் ஊழல் இடம்பெற்று வருகின்றது என்பதை நாம் மறுக்கவில்லை கடந்த காலங்களில் இருந்து தேர்தல் ஊழல் இடம்பெற்று வருகின்றது. ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள நல்ல மாற்றங்கள் எதிர்கால நகர்வுகளில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களில் எமது வருங்கால சந்ததி சரியான தேர்தல் முறைமையின் கீழ் வழிநடத்தப்படும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அந்த பொறுப்பு எம் அனைவரிடமும் உள்ளது. மேலும் மக்களுக்கு அழுத்தம் கொடுத்து வாக்குகளை எவரும் பெற்றுக்கொள்ள வேண்டாம். மக்களை சிந்தித்து செயற்படுத்தும் கால எல்லையினை வழங்க வேண்டும். அதற்கு அரசியல் கட்சிகள் அதிகாரத்தில் உள்ள நபர்கள் இடமளிக்க வேண்டும். அதுவே ஜனநாயக தேர்தல் சுதந்திரம் என கருதுகின்றோம். இவ்வாறான கலாசாரத்தில் இருந்து மீள வேண்டும் என்றால் அனைவரும் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். இது மனித உரிமைகளில் ஒன்றாகும். அதை தடுப்பதும் மனித உரிமை மீறலாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## முதலாம் தரத்திலிருந்து ஆங்கிலப்பாடம் அறிமுகம்

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் வழிகாட்டலுக்கு அமைய இலங்கையில் உள்ள மாணவர்களின் மொழி ஆற்றலை விருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக நாடளாவிய ரீதியில் காணப்படும் சகல மொழி மூலமான பாடசாலைகளிலும் முதலாம் தரத்திலிருந்து ஆங்கிலப்பாடத்தை கற்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மாணவர்களிடத்தில் ஆரம்பத்திலிருந்தே மொழி ஆற்றலை விருத்தி செய்வதை நோக்காகக் கொண்ட இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அரச பாடசாலைகளில் தரம் ஒன்று மற்றும் இரண்டுக்குரிய வகுப்புக்களில் ஆங்கில பாடத்தை அறிமுகம் செய்வதற்கு கல்வி அமைச்ச தீர்மானித்துள்ளது.

இவ்வாறு ஆரம்ப வகுப்புக்களில் ஆங்கில பாடவிதானத்தை கற்பதற்கு தேவையான பாடப்புத்தங்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் தெரிவித்துள்ளார். இத்திட்டம் இவ்வாண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. எனினும் அடுத்த ஆண்டு முதல் முழுமையாக அமுல் படுத்துவதற்கான செயற்திட்டங்கள் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ளன. விஷேட செயற்திட்டங்கள் மூலம் முதலாம் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலக்கல்வி கற்பிக்கப்படவுள்ளது. இதற்காக ஆசிரியர்களுக்கு விஷேட பயிற்சி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிட்டத்தக்கதாகும்.

## இரகசியத் தகவலில் சிக்கிய இந்திய மீனவர்கள்

SRI LANKA NAVY

கடற்படைக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில், இந்திய நாட்டுப் படகு ஒன்று தடுத்து வைக்கப்பட்டுள்ளது. அதில் பயணித்த மூன்று மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப் பொருள் கடத்தப்படுவதாக கடற்படைக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்தது. இதையடுத்து, அதில் . . . . பக்கம் 16இல் தொடர்ச்சி . . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் 15இன் தொடர்ச்சி . . . .
குறிப்பிடப்பட்டிருந்ததற்கிணங்க, மன்னாருக்கு தென்கிழக்கே தேடுதலை மேற்கொண்ட கடற்படையினர், அப்பகுதியில் தரித்திருந்த இந்திய நாட்டுப் படகொன்றை சோதனையிட்டனர்.

படகில் பயணித்த மூன்று மீனவர்களில் ஒருவர், சுமார் அரை கிலோ எடையுள்ள ஹெரோயினைத் தனது உடலில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்ததைக் கண்டுபிடித்தனர். இதையடுத்து, மீனவர்கள் மூவரையும் கைது செய்த கடற்படையினர், குறித்த படகையும் பறிமுதல் செய்தனர். மீனவர்கள் மூவரும் தற்போது தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் நடுக்கடலில் வைத்து போதை மருந்தை இலங்கையர் ஒருவருக்குக் கைமாற்ற இருந்ததாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## லசந்த கொலை வழக்கில் அதிர்ச்சித் திருப்பங்கள்!



சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்ட 2009 ஜனவரி 9ஆம் திகதிக்கு முதல் நாள், அவரது அலுவலகத்தை மருதானை திரிப்போலி இராணுவ புலனாய்வு முகாமைச் சேர்ந்த இராணுவ புலனாய்வாளர்கள் சிலர் கண்காணித்திருக்கும் அதிர்ச்சித் தகவலை புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

தாம் இதுவரை முன்னெடுத்துள்ள விசாரணைகளில் இது உறுதியாகியுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர். மேலும் கொலை இடம்பெற்ற பின் அதை விசாரித்து வந்த கல்கிசை பொலிஸாரும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரும் கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக அன்றி, சாட்சியங்களை அடையாளம் கண்டு அழிக்கவே விசாரணைகளை நடத்தியதும் தெரியவந்துள்ளது. அத்துடன் லசந்தவை கொலை செய்ததாக கடிதம் எழுதிவிட்டு தற்கொலை செய்துகொண்ட முன்னாள் புலனாய்வுத் துறை உறுப்பினர் ஜயமான்ன, சம்பவம் இடம்பெற்ற திகதியில் கொழும்பிலேயே இருக்கவில்லை என்பதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு எதிர்வரும் மார்ச் 15வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## முழுப் பணத்தையும் மீளப்பெற முடியும்!



பிணைமுறி மோசடி அறிக்கையில் ஐக்கிய தேசிய கட்சியின் யாராவது குற்றம் சாட்டப்பட்டிருந்தால் அது தொடர்பில் ஆராய அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைய செயற்படுவோம். ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விசாரணை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளதைப்போன்று 9.2பில்லியன் ரூபாவை பேப்பச்சுவல் நிறுவனத்திடம் இருந்து மீளப்பெற்றுவிட முடியும். அதற்காக ஆணைக்குழு முன்வைத்துள்ள செயற்பாட்டை பின்பற்றுவோம். முழு பணத்தையும் அரசாங்கம் பெற முடியும். அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படாது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. ஊழல் மோசடிகளை தடுக்கவே நாங்கள் பதவிக்கு வந்தோம். கட்சி நிறம் மற்றும் எவ்வாறான பதவிகள் என்றாலும் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். நாங்கள் ஆட்சிக்கு வந்து சில காலத்தில் பிணைமுறி குறித்த சர்ச்சை எழுந்தது. அதனை நாங்கள் கீழே போட்டு மறைக்கவில்லை. இரண்டு வாரங்களில் விசாரணை குழு ஒன்றை நியமித்தோம். விசாரணைக் காலப்பகுதியில் மத்திய வங்கியின் ஆளுநர் சேவையிலிருந்து விலகினார். இது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது. தேவை எனினும் பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்குமாறு நான் கோரினேன். அத்துடன் குழுவின் விசாரணை அறிக்கையும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இதுவரை காலமும் கோப் குழுவின் தலைமையை ஆளும் கட்சியை சேர்ந்த ஒருவரே வகித்தார். எனினும் தற்போதைய ஆட்சியில் கோப் குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சியை சேர்ந்த ஒருவர் வகிக்கின்றார். கோப் குழு மத்திய வங்கி விவகாரம் குறித்து விசாரித்தது. அந்த அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பிலும் விவாதமும் நடத்தப்பட்டது. பின்னர் தகுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக அறிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி வழங்கப்பட்டது. அதன் பின்னர் ஜனாதிபதி என்னுடன் கலந்துரையாடி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். அந்த ஆணைக்குழுவுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கினோம். எமது அமைச்சர்கள் ஆணைக்குழு முன் சென்றனர் நானும் சென்றேன்.

குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதும் முன்னர் எந்த அரசாங்கமும் அது குறித்து விசாரிக்கவில்லை. நாங்கள் மூன்று முறை இது குறித்து விசாரித்தோம். கடந்த ஆட்சிக்காலத்தில் பலமுறை இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பாராளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டன. ஆனால் எதுவும் நடக்கவில்லை. எமது நாட்டில் நிதி கட்டுப்பாடு பாராளுமன்றத்துக்கே உள்ளது. கடந்த காலத்தில் பாராளுமன்றம் இந்த நிலையை மறந்திருந்தது. எனினும் பாராளுமன்றம் அந்த அதிகாரத்தை பயன்படுத்தி ஒரு சந்தர்ப்பமாக பிணை முறி விவகாரத்தை பார்த்தோம். இதன் மூலம் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகின்றது.

இந்த பிணைமுறி காரணமாக பேப்பச்சுவல் நிறுவனம் 9.2 பில்லியன் ரூபாவை சட்டவிரோதமாக உழைத்துள்ளதாக ஆணைக்குழு அறிக்கை கூறுகின்றது. எமது அமைச்சின் கீழ் வருகின்ற மத்திய வங்கி குறித்த நிறுவனத்திடமிருந்து தற்போதைக்கும் 12 பில்லியன் ரூபாவை வைத்துக்கொண்டுள்ளது. எனவே ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளதைப்போன்று 9.2 பில்லியன் ரூபாவை மீளப்பெற்றுவிட முடியும். அதற்காக ஆணைக்குழு முன்வைத்துள்ள செயற்பாட்டை பின்பற்றுவோம். முழு பணத்தையும் அரசாங்கம் பெற முடியும். அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படாது.

அதேபோன்று இந்த மோசடியில் யாராவது அதிகாரி ஒருவர் தொடர்புபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மோசடி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதிலிருந்து எமது அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஒத்துழைப்பும் வழங்கியுள்ளோம். தற்போது ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

எமது அரசாங்கம் முறையான அரசாங்கம் என்பதனை இதன்மூலம் நிரூபித்துள்ளோம். வரலாற்றில் எந்த அரசாங்கமும் இவ்வாறு செயற்பட்டதில்லை. சம்பிரதாயங்களை மீறியமை தொடர்பில் எமது அமைச்சர் இராஜினாமா செய்தனர். தலையீடு இன்றி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மக்கள் சுதந்திரமாக கருத்து வெளியிட்டனர். ஊடக சுதந்திரம் உள்ளது.

பிணைமுறி மோசடி அறிக்கையில் எமது கட்சியின் யாராவது குற்றம் சாட்டப்பட்டிருந்தால் அது தொடர்பில் ஆராய திலக் மாரப்பன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைய செயற்படுவோம்.

அதுதான் ஐக்கிய தேசிய கட்சியாகும். அதனை நாங்கள் உருவாக்கிவருகின்றோம். ஜனவரி 8ஆம் திகதி இந்த நாட்டு மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை நாங்கள் உருவாக்குவோம். அது ஒரு இரவில் செய்யப்பட முடியாதது.

இந்த விசாரணை ஊடாக அதற்கு ஒரு ஆரம்பம் ஏற்பட்டுள்ளது. குறைபாடுகளை நிவர்த்தி செய்து சரியான பாதையில் பயணிக்கின்றோம். கடந்த கால மோசடி மட்டுமன்றி நிகழ்கால தவறுகள் குறித்தும் தேடுகின்றோம். விசாரணை நடத்துவோம். தேவையான நடவடிக்கை எடுப்போம்.

## சைட்டம்: மீண்டும்!



சைட்டம் தனியார் வைத்திய கல்லூரியை நிலைநிறுத்த அரசாங்கம் முயற்சிப்பதாகவும் சட்டத்துக்கு விரோதமான நடவடிக்கைகளை சைட்டம் தொடர்ச்சியாக நடத்தி வருவதாகவும் கூறி, எதிர்வரும் 25ஆம் திகதி மருத்துவ பீட மாணவர் சங்கம் நாடுதழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து, மேற்படி சங்கத்தின் அமைப்பாளர் ரயன் ஜெயலத் தெரிவித்ததாவது: நவம்பர் 8ஆம் திகதி சைட்டம் கல்லூரியை முடக்குவதாக அரசாங்கம் கூறியிருந்தது. ஆனால் இது வரையில் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சைட்டம் கல்லூரியை அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் திட்டமும் தோல்வியடைந்துள்ளது.

தடை செய்வதாகக் கூறப்பட்ட கல்லூரி இன்று மீண்டும் பழையபடி இயங்க ஆரம்பித்துள்ளது. இதை எதிர்த்தே 25ஆம் திகதி மீண்டும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியச் செய்திகள்

## காஸ்மீர் பிரச்னை இருதரப்பும் கோரும் வரையில் ஐ.நா. மத்தியஸ்தம் செய்யாது: அன்டானியோ கட்டரெஸ் கருத்து




காஷ்மீர் பிரச்னையில் தலையிட வேண்டும் என்று இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து கோரும் வரையில், அதில் தலையிடமாட்டோம் என்று ஐ.நா. பொது செயலாளர் அன்டானியோ கட்டரெஸ் கேட்டு கொண்டுள்ளார்.

இதுகுறித்து ஐ.நா. பொது செயலாளரின் செய்தி தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக் கூறியதாவது: கடந்த பத்து தினங்களாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையில் நடைபெற்று வரும் எல்லை தாக்குதல்கள் குறித்து நாங்கள் அறிந்துள்ளோம். இந்த விவகாரத்தில் சமரச முயற்சியில் ஈடுபட ஐ.நா. பொது செயலாளர் கட்டரெஸ் விருப்பமாக உள்ளார். ஆனால், இந்த விவகாரத்தில் ஐ.நாவின் தலையீட்டை இருதரப்பும் ஒப்புக் கொள்ளும் வரையில் அதில் ஐ.நா தலையிடாது. இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களது பிரச்னைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதுவே ஐ.நா. பொதுச் செயலாளரின் விருப்பம். இவ்வாறு கூறினார்.

## பெட்ரோல் விலை கிடுகிடு உயர்வு டெல்லியில் ரூ.73, மும்பையில் ரூ.80 : டீசலும் தொடர்ந்து உச்சம்



பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து இதுவரை இல்லாத அளவுக்கு எகிறிக்கொண்டிருக்கிறது. டெல்லியில் ரூ.72ஐ தாண்டியது. சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலைக்கு ஏற்ப, பெட்ரோல், டீசல் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயம் செய்கின்றன. முன்பு மாதத்திற்கு 2 முறை விலை மாற்றம் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து தினசரி விலை நிர்ணயத்தை எண்ணெய் நிறுவனங்கள் அமல்படுத்தி வருகின்றன. பைசா கணக்கில் விலை மாற்றம் இருப்பதால் விலை உயர்வு கண்கூடாக தெரிவதில்லை.

கடந்த ஆண்டு இறுதியில் டிசம்பர் 14ம் தேதி வரை தொடர்ந்து விலை குறைந்து வந்தது. இதன்பிறகு பெட்ரோல் டீசல் விலை ஓசைப்படாமல் உயர்ந்து வருகிறது. பாஜ அரசு 2014ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, பெட்ரோல் . மற்றும் டீசல் விலை உச்ச அளவை எட்டியுள்ளது. 2014 மார்ச் மாதத்துக்கு பிறகு டெல்லியில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.72.38ஐ எட்டியது. இதுபோல் டீசல் விலை டெல்லியில் ரூ.63.20, சென்னையில் ரூ.66.64, கொல்கத்தாவில் ரூ.65.86, மும்பையில் ரூ.67.30க்கு நேற்று விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில், பெட்ரோல் மற்றும் டீசல் விலையை குறைக்க கடந்த ஆண்டு அக்டோபரில் பெட்ரோல் விலை ரூ.70.88 ஆகவும், டீசல் விலை ரூ.59.14ஆகவும் இருந்தபோது லிட்டருக்கு '2 ரூபாய் குறைக்கப்பட்டது. இதனால் பெட்ரோல் விலை ரூ.68.38ஆகவும், டீசல் ரூ.56.89 ஆகவும் குறைந்தது. தற்போது அதையும் மீறி பெட்ரோல், டீசல் விலை உச்சத்துக்கு சென்றதால், மீண்டும் கலால் வரியை குறைக்க வேண்டும் என எண்ணெய் அமைச்சகம் நிதியமைச்சகத்திடம் வலியுறுத்தி பரிந்துரை அனுப்பியுள்ளது.

ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.85 ரூபாயை எட்டுமா?

பெட்ரோல் விலை கடந்த ஜூன் மாதத்தில் தினசரி விலை நிர்ணயம் வந்த பிறகு, துவக்கத்தில் படிப்படியாக குறைந்து மூன்று வாரத்தில் ஏறக்குறைய 3 ரூபாய் குறைந்து ரூ.65.46க்கு விற்கப்பட்டது. பின்னர் மீண்டும் அதிகரிக்க துவங்கி ஆகஸ்ட் மத்தியில் ரூ.70ஐ தாண்டியது. அதன்பிறகு டிசம்பர் 14 வரை பெரிய மாற்றமின்றி ரூ.72க்கள் நீடித்தது. தற்போது கிடுகிடுவென உயர்ந்து நேற்று சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.75.06க்கு விற்கப்பட்டது. அதாவது 6 மாதத்தில் 10 ரூபாய் அதிகரித்து விட்டது. மும்பையில் ஒரு லிட்டர் ரூ.80ஆகி விட்டது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருவதால் அடுத்த 6 மாதத்தில் பெட்ரோல் சென்னையில் ரூ.85ஐயும், மும்பையில் ரூ.90ஐயும் எட்டும் அபாயம் உள்ளது. இதுபோல் டீசல் விலையும் ஜூன் மத்தியில் லிட்டர் ரூ.56 ஆக இருந்தது, தற்போது 10 ரூபாய் உயர்ந்து 66 ஐ தாண்டி விட்டது. இதுவும் அடுத்த 6 மாதத்தல் விலை உயரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டீசல் விலையும் தொடர்ந்து அதிகரித்தால் விலை வாசியும் கடுமையாக அதிகரிக்கும், சரக்கு போக்குவரத்து கட்டணங்கள் உயரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பஸ்களில் தொடர்ந்து இலவச பயண அட்டை: தமிழக அரசு அறிவிப்பு



தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: மாணவர்களின் நலனை கருதி தமிழக அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கும், அரசு கல்லூரிகளில் படிக்கும் அனைத்து மாணவ-மாணவிகளுக்கும் இலவச பயண அட்டையை வழங்கி வருகிறது. மேலும் தனியார் கல்லூரிகளில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்கும் பழைய பேருந்து கட்டண அடிப்படையில், 50 சதவீதம் மானியம் வழங்கி வருகிறது. அதன்படி, 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் (அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள்) 100 சதவீத இலவச பயண சலுகையின் மூலம் 22,66,483 பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த சலுகை, பேருந்து கட்டணம் மாற்றியமைத்த பின்பும் தொடர்ந்து வழங்கப்படும். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் (ஐடிஐ) கல்வி பயிலும் மாணவ-மாணவிகளுக்கு 100 சதவீத இலவச பயண சலுகையின் மூலம் முறையே 2,13,810, 35,921, 28,348 பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த சலுகை, பேருந்து கட்டணம் மாற்றியமைத்த பின்பும் தொடர்ந்து வழங்கப்படும். தனியார் கல்லூரிகளில் கல்வி பயிலும் 3.21 லட்சம் மாணவ - மாணவிகளுக்கு 50 சதவீதம் கட்டண சலுகையுடன் கூடிய பயண அட்டைகளை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இந்த சலுகையும், பழைய கட்டணத்தின் அடிப்படையிலேயே தொடர்ந்து வழங்கப்படும். மேற்படி மாணவ - மாணவிகளுக்கான பயண அட்டைகளை வழங்குவதற்கு ஆகும் செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு 2017-18ம் ஆண்டில் 540.99 கோடியை அரசு போக்குவரத்து கழகங்களுக்கு மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டதால் பொதுமக்களுக்கு எழும் சிரமங்களை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஏற்கனவே இருந்த சாதாரண மற்றும் விரைவு பேருந்துகளுடன், கூடுதலாக 498 விரைவு மற்றும் சொகுசு பேருந்துகளை சாதாரண மற்றும் விரைவு கட்டண பேருந்துகளாக மாற்றி அமைத்து உள்ளதாகவும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

## மௌன விரதம் இருப்பதால் வருமானவரித்துறை விசாரணைக்கு ஆஜராக இயலாது: சிறையில் இருந்து சசிகலா பதில்



வருமான வரித்துறை அனுப்பிய சம்மனுக்கு சிறையில் இருந்து சசிகலா பதில் அளித்துள்ளார். மவுன விரதம் இருப்பதால் வருமானவரித்துறை விசாரணைக்கு ஆஜராக இயலாது என்று சசிகலா கூறியுள்ளார். பிப்.10-ம் தேதி வரை விசாரணைக்கு ஆஜராக இயலாது என்றும் கடிதத்தில் சசிகலா விளக்கம் அளித்துள்ளார். இதற்கு இடைப்பட்ட காலத்தில் தேவை இருந்தால் எழுத்துப்பூர்வமாக பதில் அளிக்கத் தயார் என்று சசிகலா கூறியுள்ளார். போயஸ் தோட்டத்தில் வருமானவரித்துறை கடந்த நவம்பர் 17-ம் தேதி சோதனை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக சசிகலாவின் உறவினர்கள், தொழில் பங்குதாரர்களின் வீடுகள், அலுவலகங்கள் உள்ளிட்ட 187 இடங்களில் வருமானவரித் துறையினர் சோதனை நடத்தினர். இந்த நிலையில், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லத்துக்கு வருமானவரித் துறையினர் சோதனை நடத்தினர். இந்த சோதனை தொடர்பாக சசிகலாவுக்கு வருமான வரித்துறை சம்மன் அனுப்பியது குறிப்பிடத்தக்கது.

## பஸ் கட்டணம் வாபஸ் பெறக்கோரி தொடர்ந்து கொந்தளிப்பு 50 இடங்களில் மாணவர் போராட்டம்: ஜல்லிக்கட்டு போராட்டம் போல தீவிரம் அடைகிறது

பஸ் கட்டண உயர்வை கண்டித்து தமிழகம் முழுவதும் நேற்று 2வது நாளாக 50க்கும் மேற்பட்ட இடங்களில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கல்லூரிகள் முடங்கின. மாணவர்கள் கொந்தளிப்பு, ஜல்லிக்கட்டு போராட்டம் போல தீவிரம் அடைகிறது. தமிழகத்தில் கடுமையான அளவு பஸ் கட்டண உயர்வு செய்யப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் முதல் போராட்டம் தொடங்கி நடத்தி வருகின்றனர். சென்னை அண்ணாநகரில் கந்தசாமி நாயுடு கல்லூரி முன்பு மாணவர்கள் நேற்று பிற்பகல் 3 மணிக்கு சாலை மறியலில் ஈடுபட்டனர். காஞ்சிபுரத்தில் அரசு கல்லூரி மாணவ, மாணவிகளும், செங்கல்பட்டில் சட்டக்கல்லூரி மாணவ, மாணவிகளும் சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கோவை சட்டக்கல்லூரி மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் நேற்று உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர். பின்னர் கல்லூரி முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். மருதமலை சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சாலையில் வாகனங்கள் அணிவகுத்து நின்றன. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் உள்ள அரசு கலைக்கல்லூரி மாணவ, மாணவிகள் 300 பேர் நேற்று காலை வகுப்புகளை புறக்கணித்து சத்தியமங்கலம் - அத்தாணி சாலைக்கு ஊர்வலமாக வந்து மறியலில் ஈடுபட்டனர். மறியல் காரணமாக அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கோபி கலை அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகள் சுமார் 500 பேர், நேற்று வகுப்புகளை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நாகர்கோவிலில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர். நித்திரவிளை அருகே தூத்தூர் புனித யூதா கல்லூரி மாணவ மாணவிகள் நித்திரவிளை - சின்னத்துறை சாலையில் மறியலில் ஈடுபட்டனர். நாகர்கோவில் வட்டார மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் வேப்பமூடு சந்திப்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தலையில் முக்காடு போட்டு, பஸ் கட்டண உயர்வுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். அருமனை அருகே ஆலஞ்சோலை சந்திப்பில் மார்க்சிஸ்ட் சார்பில் பஸ்களை சிறைபிடிக்கும் போராட்டம் நடந்தது. இதில் பள்ளி, கல்லூரி மாணவ - மாணவிகளும் கலந்து கொண்டு 2 அரசு பஸ்களை சிறைபிடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிவிழும் ஒரு நாள்...

- மு. தயாளன

அதிகாலை மூன்று மணி. அலாரத்தின் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழும்பிய தேவன் யன்னல் சீலையை விலக்கி வெளியே பார்த்தான். வெள்ளை வெளேரென்று இருந்தது. அவனுடைய காரை பனி மூடி வெள்ளையாக்கி விட்டிருந்தது. திரும்பிக் கட்டிலைப் பார்த்தான். பூரணி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். அவளை எழுப்பாமல் பூனைபோல் நடந்து குளியலறைக்குச் சென்று காலைக் கடன்களை முடிப்பதில் கவனமானான்.

அவன் வேலை செய்யும் இடம் பக்கத்திலில்லை. காரில் செல்லவே ஒரு மணித்தியாலம் வேண்டும். வீதியில் அவன் கார் மட்டும் ஓடிக்கொண்டிருந்தால் மட்டும்தான் இது சாத்தியம். இல்லையெனில் இரண்டு மணித்தியாலங்கள் எடுக்கும். அவனுடைய வேலைத் தலம் ஒரு பெற்றோல் நிலையம். லண்டன் நகரத்து வீதிகள் அவனோடு ஒத்துழைப்பதில்லை. காலை 5 மணிக்கு அவன் நின்றாக வேண்டும். அப்போதான் அங்கு வேலை செய்யும் மற்றவர் வீட்டுக்குச் செல்ல முடியும்.

இன்றைக்கு சரியான பனி கொட்டிக் கொண்டிருக்கிறது. வேகமாகவும் கார் ஓட முடியாது. ஊர்ந்து ஊர்ந்துதான் செல்ல முடியும். வேலைக்கு சடுதியாக விடுப்பும் எடுக்க முடியாது. பத்து மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும். இந்தப் பத்து மணித்தியாலங்களில் அவன் துப்புரவு செய்ய வேண்டும் சாமான்கள் முடிந்திருந்தால் அவற்றை நிரப்ப வேண்டும் காசாளர் வேலை பார்க்க வேண்டும். அவனுக்கு சில வேளை நாரி வலிக்கும். என்ன செய்வது? பல்லைக் கடித்துக் கொண்டு செய்ய வேண்டும். சில வேளை கொஞ்சம் ஓய்வாக நின்றால் வீட்டிலிருந்து கமராவில் பார்க்கும் முதலாளி ஏதாவது வேலை சொல்லிவிடுவார்.

இத்தனைக்கும் அவனுக்குக் கிடைக்கும் சம்பளம் மணித்தியாலத்துக்கு ஐந்து பவுண்கள் மட்டுமே. சம்பளத்தைக் கூட்டச் சொல்லிக் கேட்டால் வெளியேற்றி விடுவார் என்கின்ற பயம். வெளியில் மூன்று பவுண்டுகளுக்கு வேலை செய்வதற்கும் பலர் தயாராக இருந்தார்கள்.

இதனால் தேவன் அடக்கி வாசித்துக் கொள்வான். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சமையலறைக்குள் சென்று தேனீர் தயாரித்தான். அங்கே நின்றபடியே தேனீரைக் குடித்துவிட்டு வந்து பார்த்தான் மனைவி இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள்.

பாவம் என்று மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டான். வேகமாக உடையை அணிந்து கொண்டு பையை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு புறப்பட்டான். வெளியில்வந்த போது குளிர் அவன் முகத்தில் பளாரென்று அறைந்தது. வாகனத்துக்குக் கிட்டச் சென்றபோது கைகள் விறைத்துவிட்டது.

பனி அப்படியே அவனது வாகனத்தின் மீது உறைந்து போயிருந்தது. கதவைத் திறந்து பனியை விறாண்டும் தகட்டை எடுத்து விறாண்டினான். கை இருப்பதே தெரியாமல் விறைத்துப் போயிருந்தது. வாழ்க்கைமீது அவனுக்கு வெறுப்பே வந்தது. நேற்று அவன் அம்மா ஊரில் இருந்து எழுதிய கடிதம் ஞாபகத்துக்கு வந்தது.

கட்டியவீடு முடியவில்லையாம். எப்படியும் தைக்குள்ளை முடிச்சால்தானாம் தங்கைச்சிக்குக் கல்யாணம் முற்றாக்கலாமாம். ஒருமாதிரி பனியோடு போராடி வெற்றியடைந்துவிட்டான். காரின் சாவியை எடுத்துத் திருப்பினான். அவனின் போதாத காலம் அது தொடங்க மறுத்துவிட்டது. முடிஞ்ச மட்டும் திருப்பிப்பார்த்தான். அது நகர்வதாக இல்லை. அவனுக்கு அழுகை வரும் போலிருந்தது. அப்படியே இருந்தான். அம்மா எழுதியிருந்தாள். தம்பி இஞ்சை ஊரிலை எல்லாரும் கார் வைச்சிருக்கினம். தங்கச்சி ஆசைப்படிறாள். உனக்கு ஏலும் எண்டு நினைக்கிறன். ஒரு பத்து லட்சம் அனுப்பினியெண்டாள் வாங்கியிடலாம். காரைவிட்டு வெளியில் இறங்கி போனற்றைத் திறந்து பார்த்தான். பிளக்வையரை கழட்டிப் பூட்டினான. இனிமல் சரிவரும் எண்டு மனதிற்குள் சொல்லிக் கொண்டான். இண்டைக்கு உண்மையில் அவனுக்கு வேலையில்லை. அங்கை வேலை செய்யிற ஒருவர் விடுப்பு எடுத்ததாலை தான் அதைச் செய்யிறதாக முதலாளிக்கு வாக்குக் கொடுத்துவிட்டான். காருக்குள் ஏறி ஸ்ராட் செய்தான்.

அதற்கும் அவனது பிரச்சினை புரிந்திருக்க வேண்டும். இம் முறை அவனை ஏமாற்றாமல் சிரித்தது. அவனும் சிரித்தான். கார் மெதுவாக நகர்ந்தது. வீதியில் கார்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன. வழுக்காமல் இருக்க உப்புத் தூவி இருந்தார்கள். அன்று அவன் மனைவி கூறியது ஞாபகத்துக்கு வந்தது. இஞ்சரப்பா இந்த சமருக்கு நாங்கள் கொலிடே போவமே. எல்லாரும் போகினம். நீங்கள் நெடுக உங்கடை அம்மா கேட்ககேட்க அனுப்பிக் கொண்டிருக்கிறியள். எங்களைக் கவனிக்காயளாம். அவளின் நியாயமான கேள்வியும் ஆதங்கமும் அவனுக்கும் புரிந்தது. அவனுக்கும் கொலிடே போக ஆசைதான். மனைவி கேட்டபோது அவன் எதுவும் சொல்லவில்லை. சும்மா நெடுக அம்மாவை இழுக்காதையும் என்று கடிந்துவிட்டான். தான் செய்வது பிழை என்பது அவனுக்குப் புரிந்ததுதான். ஆனால் அவளிடமிருந்து வந்த நியாயமான கோரிக்கையைத் தட்டிக்கழிக்க அவளைக் கடிந்து பேசுவதைத் தவிர வேறு வழி அவனுக்குத் தெரியவில்லை. கார் இப்போ கொஞ்சம் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

இன்னும் பதினைந்து நிமிடததில் நின்றாக வேண்டும். வீதி வெறிச்சோடித்தான் இருந்தது. அவனுடைய மனம் இன்னுமொரு வேலை செய்வதைப் பற்றி யோசிக்கத் தொடங்கி இருந்தது. அம்மாவும் தங்கச்சியும் ஆடம்பர வாழ்க்கையை நோக்கி நகர்வது அவனுக்குப் புரிந்தது. ஆனால் தாய்க்கு இதனை உணர்த்த அவனால் முடியவில்லை. ஊரில் இருக்கிறவை வெளிநாட்டிலை ஏதோ காசு மரத்திலை முளைக்குதெண்டு நினைக்கினம் போலை என்று அவன் நண்பன் ஒருதரம் சொன்னது நினைவுக்கு வந்தது. அவனுடைய அக்காவும் அடிக்கடி கடிதம் எழுதிக் காசு கேட்பாள். அவளின் கணவன் ஒரு சோம்பேறி. மச்சான் வெளியில் இருக்கிறார் எண்டவுடன் வேலைக்குப் போவதை விட்டுவிட்டார்.

மனைவியை நச்சரித்து கடிதம் எழுத வைப்பதும் அவரே. எந்தப் பொறுப்பையும் தன்னுடையதாக்காத பொறுக்கி. இதையெல்லாம் நினைக்க நினைக்க அவனுக்கு மண்டை இடிக்கத் தொடங்கி இருந்தது. வேலைத் தலத்துக்கு வந்துவிட்டான். கணக்குகளைப் பொறுப்பெடுத்துக் கொண்டான். இப்போ வேலை செய்து கொண்டிருந்தவர் அடுத்த வேலைக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார். அண்ணை உங்கடை இடத்திலை எனக்கும் ஒரு வேலை கேட்டுப் பாருங்கோ என்று கேட்டுக் கொண்டான். அவர் பெயர் சுந்தரம். இவனைவிட வயது மூத்தவர். அவருக்கு மூன்று சகோதரிகள். அவர்களுக்காக இன்னும் முப்பந்தைந்து வயதாகியும் கல்யாணம் கட்டாமல் ஓடிஓடி வேலை செய்து கொண்டிருக்கிறர்.

அதுக்கென்ன தம்பி கேட்டுப் பார்க்கிறன். என்று கூறிவிட்டு அவர் புறப்பட்டுவிட்டார். அவனின் வேலை ஆரம்பமாகிவிட்டது. இண்டைக்கு பனி கொட்டுவதாலை பெற்றோல் நிலையம் அவ்வளவு கூட்டமாகவில்லை. இந்த முறை கடன்பட்டோ என்னவோ மனைவியையும் பிள்ளையையும் எப்படியும் கொலிடேக்குக் கூட்டிக் கொண்டு போகவேணும். எங்கை போறதெண்டு யோசிக்கத் தொடங்கினான். அவனுடைய சிந்தனையில் எதுவும் தட்டுப்படவில்லை. தொலைபேசி அடித்தது. முதலாளிதான் எடுத்திருந்தார்.

சனம் இல்லை எண்டால் ஏன் வாய் பார்த்துக்கொண்டு நிற்கிறாய். முன் பக்கத்தைத் துப்பரவு பண்ணன். தேவன் எதுவும் சொல்லவில்லை. மறு பக்கத்தில் படாரென்று போன் வைக்கும் சத்தம் கேட்டது. தொழில்நுட்பம் வளர்ந்ததாலை வந்த பிரச்சினை. கமராவில் வீட்டிலையிருந்து பார்த்துக் கதைக்கிறார்.

தாறது 5 பவுண் அதுக்குள்ளை அவற்றை கதை தேவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். மீண்டும் தொலைபேசி கிணுகிணுத்தது. எடுத்தது அவன் நண்பன். மச்சான் அந்தக்காசு என்ன மாதிரி. தேவையாய்க் கிடக்கு மச்சான். ஒரு மாதத்துக்கு முன் நண்பனிடம் தாய்க்கு அனுப்புவதற்காக வாங்கியிருந்தான். சரி மச்சான் பார்க்கிறன் என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டான். ஒரு மனிதனின் உழைப்பு ஓராயிரம் தேவைகள். இந்த முறை கொலிடெ போறது சாத்தியப்படாது. மனிசியைக் கொஞ்சம் சமாளிக்கவேணும மனதுக்குள் நினைத்துக்கொண்டான். அம்மாவுக்கு அனுப்ப என்ன செய்யிறது. சீட்டும் எடுக்கேலாது. எடுத்தாலும் அது நண்பனுக்குக் கொடுக்க வேண்டும். அதை நம்பித்தான் கொலிடே பற்றி யோசித்தவன். இப்போ அதுவும் முடிஞ்சுது. இதுவரைக்கும் இர்ண்டு வீடு கட்டிற காசு அனுப்பியாச்சு. இன்னும் வீடு முடியேல்லை. அம்மாவின் ஊதாரித்தனமும் ஆடம்பர எண்ணமும தான் என்று மனைவி கத்திய குரல் காதில் ஒலிக்கிறது.

எவ்வளவுதான் அவளை அடக்கினாலும் அவள் சொல்லிற உண்மைகளை தூக்கி எறியேலாது என நினைத்துக் கொண்டான். தன்னைக் கலியாணம்கட்டி வந்த நாட் தொடக்கம் தன் மனைவி மற்றவர்கள் போல் வாழவில்லை என்ற உண்மை அவனை வருத்தத்தான் செய்தது. அவனுடைய வேலை முடிய இன்னும் ஒரு மணித்தியாலம்தான் இருக்கிறது.

வேலை முடிய சீட்டுக் கூறலுக்குப்போய் என்ன கழிவெண்டாலும் கழிச்சு எடுத்து நண்பனின் கடனை அடைக்க வேண்டும என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான். அம்மாவுக்கு தன் நிலைமையை விளக்கி விரிவாய் ஒரு கடிதம் எழுத வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டான். அவனிடமிருந்து வேலையைப் பொறுப்பேற பவரும் வந்துவிட்டார். வேலையைப் பொறுப்புக் கொடுத்துவிட்டு காரை நோக்கி நடந்து கொண்டிருந்தான் தேவன்.


## SLT ப்ரோட்பேண்ட் பாவனையாளர்களுக்கு 2018 இலும் மேலதிக டேடா

நாட்டின் இணையதள சேவை வழங்குவோரில் முன்னணியில் இருக்கும் SLT ப்ரோட்பேண்ட் சேவை 2018 இல் இந்த துறையில் புரட்சி ஒன்றை ஏற்படுத்தி தனது பக்கேஜுக்கான விலையில் 75 வீதம் வரையான மேலதிக டேடாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி செலுத்தப்படும் கட்டணத்திற்கு அதிக பெறுமதியான சேவையை அனுபவிக்கும் SLT ப்ரோட்பேண்ட் பாவனையாளர்கள் அந்த பெறுமதியை மேலும் அதிகரித்துக் கொண்டு வாழ்க்கை முறையில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்லும் அவர்களின் டிஜிடல் தேவையை குறைவின்றி பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த டேடா அளவை அதிகரித்துக் கொள்வது, தற்போதும் இந்த சேவையை பெறும் SLT பாவனையாளர்கள் மற்றும் புதிதாக இந்த சேவையை பெற இணையும் புதிய இணைப்புகள் உள்ளடக்கப்பட்டதாகும். இதன்படி நாட்டில் அதிக ஸ்திரமான, தடங்கலற்ற மற்றும் வேகமான இணையதள தொடர்புகளுடன் வேறு எந்த மேலதிக கட்டணமுமின்றி அதிகம் அதிகமான இணையதளத்தில் பயணிக்க உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

இத்தோடு, இலங்கையுடன் தொடர்புடைய வேறு எந்த சேவையுடனும் ஒப்பிட முடியாததும் செலுத்தப்படும் கட்டணத்திற்கு கிடைக்கும் பெறுதியில் முதலிடத்தில் எப்போதும் இருக்கும் ப்ரோட்பேண்ட் சேவையாக SLT ப்ரோட்பேண்ட் பெற்றிருக்கும் வரவேற்பு மேன்மேலும் அதிகரிக்கும்.

இதன்மூலம் மாதத்திற்கு 3000க்கும் அதிக கிகா பைட் டேடா கொடுப்பனவுடன் வருடம் முழுவதும் நம்ப முடியாத கொடுப்பனவுகளை வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த சோவையில் வழங்கப்படும் 100Mbps வேகம் கொண்ட தொடர்புடன் நாளுக்கு நாள் அதிகரிக்கும் டிஜிடல் தேவைக்கு முன் Wi-Fi தொழில்நுட்பத்தின் ஊடே குறிப்பிட்ட பல உபகரணங்களுக்கும்

ஒரே நேரத்தில் அதனை ஈடுபடுத்த முடியும். SLT ப்ரோட்பேண்ட் தனது பாவனையாளர்களுக்கு தேசிய Fibre Optics தொழில்நுட்ப வலையமைப்பு ஊடே சர்வதேச தரத்திலான அதிவேக இணையதள தொடர்பொன்றை அனுபவிக்கும் வாய்ப்பொன்றை எற்படுத்திக் கொடுத்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரணியில் ஓர் குரலாய் ஒலிப்போம்!

## தமிழ் தேசிக் கூட்டமைப்பு - பிரித்தானியக் கிளையின் அழைப்பு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வட-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தேர்தலில் வாக்களிக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கடந்த தேர்தல்களில் தமிழ் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட பலரும் ஒரு அணியில் இன்று மக்களைச் சந்திக்கவுள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றுத் தலைமை வேண்டும் என்ற கோரிக்கையோடு வருகின்ற இவர்களிடம் வட-கிழக்கு தமிழ் மக்கள் ஒரு தகுந்த தலைமையை எதிர்பார்க்கலாமா? என்பதுதான் முக்கியமான கேள்வியாக உள்ளது. தமிழ் மக்கள் பேரவையில் கைகோர்த்து நின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சுரேஸ் பிரேமச்சந்திரனும் இன்று எந்தக் கொள்கை மாறுபாட்டால் பிரிந்து நிற்கிறார்கள் என்பதை தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். நீயா? நானா? என்று போட்டி போடும் இவர்களா தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கப் போகிறார்கள்? தாயகம் தேசியம் தன்னாட்சி என்ற கொள்கையில் உறுதியாக நிற்பதாகக் கூறிக்கொள்ளும் இவர்கள் அந்த மூன்றையும் அடைவதற்கு எந்த வழியில் எப்படி எவ்வளவு காலத்திற்குள் முடியும் என்பதைக் கூறுவார்களா? அட்டைகளைத் தாங்கிப் பிடிப்பதாலும் இரத்தத்தால் உண்ணாவிரதம் இருப்பதாலும் அவற்றை அடைய முடியுமா? எந்த அணுகுமுறையில் இந்த இலட்சியத்தை அடையலாம் என்பதைத் தெளிவுபடுத்துவார்களா? ஒரு நாடு இரு தேசம் என்ற கோஷத்தை இன்று கேட்கவே முடியவில்லை.

கடந்த 30 ஆண்டுகளாக வட-கிழக்கு தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் விடுதலைப்புலிகளின் தலைமையை ஏற்றுக் கொண்டதோடு ஏகப்பிரதிநிதி-களாகப் தேர்தல்கள் மூலம் த.தே.கூட்டமைப்பை ஆதரித்து வெளிக்காட்டியுள்ளனர். அதை த.தே.கூட்டமைப்பும் ஏற்றுக் கொண்டிருந்தது. விடுதலைப்-புலிகளை நிராகரித்ததோடு அவர்களுக்கெதிராக செயற்பட்ட மகிந்த அரசோடு விசுவாசமாகச் செயற்பட்ட ஆனந்தசங்கரி அவர்களுக்கு ஏற்கனவே தமிழ் மக்கள் நல்ல பாடம் புகட்டிவிட்டனர். அவரோடு சேர்ந்து தமிழ் மக்களிடம் ஒரு காலத்தில் செல்வாக்காக இருந்த உதயசூரியன் சின்னத்தை இரவல் வாங்கிக் கொண்டு தனது கட்சியில் தனித்துப் போட்டியிட துணிவற்ற சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் அரசியல் அஸ்தமனம் இந்தத் தேர்தலுடன் வந்துவிடும் என்பது எமது எதிர்பார்ப்பு.

இன்றைய அரசுடன் புரிந்துணர்வுடனான அரசியலில் டுபட்டிருக்கம் த.தே.கூட்டமைப்பு மேற்கூறிய வரிகளில் விமர்சனத்திற்கு உள்ளாகியிருப்பதுபற்றி தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். அகிம்சைப் போராட்டத்தில் 35 வருடங்களையும் ஆயதப்போராட்டத்தில் 30 வருடங்களையும் கடந்து வந்த ழத் தமிழினம் இன்று பலமிழந்து உலக நாடுகளின் தயவில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். உலக நாடுகளின் தீர்மானம் GSP சலுகை நிறுத்தம் போன்ற பல உலக நாடுகளின் இலங்கை மீதான அழுத்தங்களை இறுக்குவதன் மூலமாகவே இலங்கை அரசைத் தமிழர் தீர்வுக்கு இணங்க வைக்கலாம் என்பதே இன்றைய நிலை. இதை முதலமைச்சர் கூறுவதைப்போல இரந்து பணிந்து நிற்பதாகக் கொள்ளமுடியாது. கொள்கையில் இறுக்கமாக. உறுதியாக நிற்கிறோம் என்று பெருமையாகக் கூறிக்கொள்வதால் தீர்வு கிடைக்கப் போவதில்லை. அந்தக் கொள்கையை அல்லது அதற்குச் சமமான அதிகாரமுள்ள ஒரு அரச கட்டமைப்பை நிரந்தரமாக உருவாக்குவதற்கு சாதுரியமாக நடந்து கொள்ளவதே இன்று செய்ய வேண்டியதும் செய்யக்கூடியதுமான நகர்வு. இதையே த.தே.கூட்டமைப்பு செய்து வருகின்றது. 'மகிந்த அணியினர் தோல்வியுற்றால் தனித் தமிழ்ழம் மலரும்" என்ற மகிந்தாவின் கூற்றும் இடதுசாரிகள் என்று சொல்லப்படுபவர்களின் தூரநோக்கற்ற வகுப்புவாதக் கூச்சல்களும் சிங்கள மக்களை உசுப்பேற்றும் வேளையில் இலங்கை வரலாற்றில் இதுவரை இணைந்திராத இருபெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த ஒரு அரசின் மூலமாகவே தமிழர்களுக்கான ஒரு தீர்வை எட்டும் இறுதிச் சந்தர்ப்பம். எதிர்ப்பு நிராகரிப்பு என்ற நிலைப்பாடுகளை எடுத்து இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைத தவறவிட்டோமானால் தமிழினத்திற்குத் துரோகம் இழைத்தவர்களாவோம்.

அகிம்சை ஆயுதப்போராட்டங்களுடாகப் பயணித்த தலைவர் சம்பந்தன் ஐயாவின் அணுகுமுறையில் நம்பிக்கை வைத்து அவர் கையை மேலும் வலுப்படுத்துவதன் மூலமே இன்றைய அரசுக்கு மேலும் இறுக்கமான் உரமான செய்தியைக் கூறவேண்டிய தருணம் இது.

மேலும் கீழ் மட்டத்திலுள்ள அதிகார அலகான உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் அரசுக்கு எதிரான ஒரு நிலப்பாட்டை எடுப்பதன் மூலம் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பது கடினமாக்கப்படலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து வாக்களித்ததன் மூலம் ஒரு அமைதி வாழ்வுக்கான சூழலை ஏற்படுத்த முடிந்தது. இன்றைய அரசு செய்திருக்கக்கூடிய பல விடயங்களில் இழுத்தடிப்பும் காலதாமதமும் செய்தாலும் காணி விடுவிப்பு அமைதி வாழ்வு பேச்சுச் சுதந்திரம் போன்ற ஜனநாயக விழுமியங்களை ஏறபடுத்தியுள்ளதை மறுக்க முடியாது. சர்ச்சைக்குரியதாக இருந்தாலும் தன்னிச்சையாகச் செயற்படாமல் அரசியற் தீர்வுக்கான முன்மொழிவை மக்கள் முன் வைத்துள்ளது. அதில் எதுவுமே இல்லை என்பது த.தே.கூட்டமைப்பை எதிர்ப்பவர்களின் வாதம். எதுவுமே இல்லையெனில் முற்றாக நிராகரிக்கும்படி சிங்களக் கட்சிகளும் பௌத்த பிக்குகளும் ஏன் கூறவேண்டும். நிராகரிகக் வேண்டும் எனக் கூறிய பௌத்த சங்கத்தினர் பிரதமரின் ஏற்பாட்டில் தலைவர் சம்பந்தன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியதன் பின்பு துரிதமாகச் செயற்படும்படி கூறியது எப்படி ஏற்பட்டது? முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள் தானும் சிவாஜியுமே இந்த வேலைகளைச் செய்வதாகக் கூறுவது பொருந்துமா?

கிழக்கில் வாக்களிப்பு வீதம் மிகக் குறைந்து காணப்படுகிறது. 40% மான மக்கள் வாக்களிப்பதில்லை. அவர்களை பெப்ரவரி 10ல் வீதிக்கு வந்து வாக்களிக் ஊக்குவிக்க வேண்டும்.

உலக பொருளாதார மாநாடு, சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நேற்று தொடங்கியது. இதில் பிரதமர் மோடி பேசியதாவது: உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக டாவாசில் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. கடந்த 1997ம் ஆண்டில் இந்திய பிரதமர் இங்கு வந்தபோது இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தி 400 பில்லியன் டாலராக இருந்தது. தற்போது அது 6 மடங்குக்கு மேல் அதிகரித்து விட்டது. மாறிக்கொண்டிருக்கிறது: 1997ம் ஆண்டில் உலக பொருளாதார மாநாட்டின் மையக் கருத்து நெட்வொர்க் சமுதாயத்தை உருவாக்குவதாக இருந்தது. இப்போது அது பழங்கால கருத்தாக தெரிகிறது.

ஒசாமா பின்லேடன், ஹாரிபாட்டர் போன்ற பெயரை, அப்போது ஒரு சிலர் மட்டுமே கேள்விப்பட்டிருந்தனர். இன்டர்நெட்டில் கூகுள் இல்லை. அமேசான் அப்போது அடர்ந்த காடு என்றுதான் தெரியும். டிவிட் என்றால் பறவைகள் செய்வது, மனிதர்கள் செய்வது அல்ல என்றுதான் நினைத்தோம். தொழில்நுட்பம் நமது வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டிருக்கிறது. நல்லது, கெட்டது: பருவநிலை மாற்றமும், தீவிரவாதமும், இந்த உலகம் சந்தித்துள்ள மிகப்பெரிய சவால்கள் மற்றும் மிகுந்த கவலை அளிக்கக் கூடிய விஷயங்களாக உள்ளன. சுற்றுச்சூழலில் அக்கறை கொள்வது, இந்திய கலாச்சாரத்தின் ஒரு பங்கு. தீவிரவாதம் அபாயகரமானது.

ஆனால் நல்ல தீவிரவாதி, கெட்ட தீவிரவாதி என வேறுபடுத்துவதும், அபாயகரமானதுதான். தீவிரவாத பிரச்னையில் இந்தியாவின் நிலைப்பாடு அனைவருக்கும் தெரியும். அதை நான் விவரிக்க விரும்பவில்லை. அமைதி, பாதுகாப்பு, நிலைத்தன்மை ஆகியவையும் உலகத்தின் மிகப்பெரிய சவால்களாக உள்ளன. உடைந்த உலகில், எதிர்கால பிரச்னைகளை பகிர்ந்து கொள்ளும் சூழ்நிலை உருவாக்குவதுதான் உலக பொருளாதார மாநாட்டின் மையக் கருத்து. ஆபத்தானது: பல நாடுகள் தங்கள் உள்நாட்டு பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலேயே குறியாக இருக்கின்றன. ஒருங்கிணைந்த உலகம் பற்றி எல்லோரும் பேசுகிறோம். ஆனால் உலகமயமாதல் மங்கி கொண்டிருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சொந்த நலனுக்காக மனிதர்கள் தவறானவற்றுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். சில நாடுகள் பின்பற்றும் சுயநல பொருளாதார பாதுகாப்பு கொள்கைகளும் தீவிரவாதம், பருவநிலை மாற்றம் போல் அபாயகரமானதுதான். உலகம் ஒரே குடும்பம்: இந்த உலகம் ஒரு குடும்பம் என்பதுதான் இந்தியாவின் தத்துவம். தற்போதைய சூழ்நிலையில் உலகின் விரிசல் மற்றும் வேறுபாடு பிரச்னைகளை தீர்க்க இந்த தத்துவம் மிக பொருத்தமாக உள்ளது. வளர்ச்சி இல்லை என்றால் விரிசல்கள், பிளவுகள், தடைகள் ஏற்படும். சர்வதேச ஒத்துழைப்பு விதிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும். உலக பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை நாம் அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இந்த மாநாட்டில் பிரதமர் மோடி மிகச் சிறப்பாக பேசியதர்கவும், உலக சமுதாயத்துக்கு சிறந்த கருத்தை தெரிவித்ததாகவும், ஆந்திர முதல்வர் சந்திபாபு நாயுடு கூறினார். தொழிலதிபர் முகேஷ் அம்பானி, நடிகர் சாருக்கான் ஆகியோரும் மாநாட்டில் அமர்ந்து பிரதமர் ஆற்றிய உரையை கேட்டனர். சமஸ்கிருத மேற்கோள்கள் மாநாட்டில் பிரதமர் மோடி பேசுகையில், பல இடங்களில் சமஸ்கிருத மொழியில் அமைந்த பழமொழிகளை மேற்கோள் காட்டி பேசினார். இதை மாநாட்டில் இருந்தவர்களுக்கு மொழிப்பெயர்ப்பாளர்கள் மொழி பெயர்த்து கூறினர். சில இடங்களில் பிரதமரே அதன் அர்த்தத்தை கூறி விளக்கினார்.

## பிரதமர் மோடியை கிண்டல் செய்த டிரம்ப்



அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் பிரதமர் மோடி இடையே நெருங்கிய புரிதல் உணர்வு இருந்தது. இதனால் கடந்த ஆண்டு ஜனவரி 20ல் அதிபர் பதவி ஏற்கும் விழாவில் பங்கேற்ற வரும்படி டிரம்ப் அழைப்பு விடுத்தார். அதன்பின் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றபோது, அங்கு இருவரது நட்பும் வலுப்பெற்றது. அதற்கு முன்னதாக பிரதமர் மோடி 2014 தேர்தல் பிரசாரத்தில் பயன்படுத்திய ஆப் கி பார் மோடி சர்க்கார், அதாவது இந்த முறை மோடி அரசு என்ற வார்த்தையை தனது தேர்தல் பிரசாரத்திலும் டிரம்ப் பயன்படுத்தி இருந்தார். அதாவது, ஆப் கி பார் டிரம்ப் சர்க்கார் என்று இந்தியர்கள் மத்தியில் அவர் பிரசாரம் செய்தார்.

இதனால் இருநாட்டு உறவுகளும் பலப்பட்டு வந்த நிலையில் திடீரென மோடி மீது டிரம்ப்பிற்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக அமெரிக்காவில் இருந்து வெளியாகும் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியாகி உள்ளது. அதில், ஆப்கன் பிரச்னையில் அதிக படைகளை அங்கு அனுப்பி தீவிரவாதத்தையும், கிளர்ச்சியையும் ஒடுக்க பிரதமர் மோடி ஆதரவு தந்தார். ஆனால் இதுவரை இந்தியா சார்பில் அதற்கு எந்தவித உதவியையும் செய்யாததை மறைமுகமாக சுட்டிக்காட்டும் வகையில், இவ்வளவு அதிகமாக ஒரு நாட்டிற்கு ஆதரவு அளித்த பிறகும் சிறிய அளவில் கூட பதிலுக்கு உதவாததை நான் இதுவரை பார்த்ததில்லை என்றார்.

வெள்ளை மாளிகையோ அல்லது அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகமோ அதிபர் டிரம்ப் எதைப்பற்றி கூறுகிறார் என்பதை இதுவரை வெளிப்படையாக கூறவில்லை. எனவே இந்தியா அதிகாரிகளும் அதற்கு பதில் அளிக்கவில்லை. மோடியை டிரம்ப் இவ்வாறு கேலியாக குறிப்பிட்டுள்ளது இது முதல்முறை அல்ல. ஏற்கனவே ஆப் கி பார் டிரம்ப் சர்க்கார் என்று அவர் மோடி ஸ்டைலில் கூறியதும், அவரைப்பின்பற்றி அல்ல.. அவரை கிண்டல் செய்தே இப்படி கூறியுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் அமெரிக்காவில் உள்ள பணிகள் இந்தியாவில் இருந்து அவுட்சோர்சிங் முறையில் நடப்பதையும் அவர் கேலி செய்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது:

2016ல் கிரெடிட் கார்டு தொடர்பாக நான் வங்கி சேவை மையத்தை தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது பேசிய நபர் இந்தியாவை சேர்ந்தவர் என்பதை அறிந்து, நீங்கள் இந்தியாவைச் சேர்ந்தவர் என்று நினைக்கிறேன் என்றேன். அந்த நபர் ஆமாம் என்றார். அதற்கு நான் ஓ.. இந்தியா மிகப்பெரிய நாடு. அழகான நாடு. அந்த நாட்டு தலைவர்களைப்பற்றி வருத்தப்படவில்லை. அந்த நாட்டு தலைவருடன் இணைந்து செயல்படும் முட்டாள்தனமான எங்கள் தலைவர்களைப்பற்றித்தான் வருத்தப்படுகிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார். எனவே அதிபர் டிரம்ப் முன்பிருந்தே பிரதமர் மோடியை கிண்டல் செய்துதான் வந்துள்ளார் என்று வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

## லிபியாவில் பயங்கரம் : கார் குண்டு தாக்குதல்' 34 பேர் பரிதாப பலி

லிபியா நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய நகராக பெங்காசி உள்ளது. இங்கு அல் சல்மானி பகுதியில் உள்ள மசூதிகளில் நேற்று முன்தினம் மாலை தொழுகை நடந்தது. தொழுகை முடிந்து பொதுமக்கள் வெளியே வந்த சமயம் அங்கு நிறுத்தப்பட்டு இருந்த இரண்டு கார்களில் இருந்த வெடிகுண்டுகள் வெடித்து சிதறின. இந்த இரட்டை கார் வெடிகுண்டு தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 34 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். தகவலறிந்து மீட்பு படையினர் அங்கு விரைந்து வந்தனர்.

படுகாயம் அடைந்த 87 பேரை மீட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பினர். இந்த தாக்குதலில் பலியானவர்களில் பொதுமக்களும், போலீசாரும் அடங்குவார்கள். லிபியாவில் இரண்டு பிரிவுகள் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இதில் கலிபா கப்தார் தலைமையில் ஒரு குழுவும், சாலாபிஸ்ட் தலைமையில் இன்னொரு குழுவும் செயல்படுகிறது.

## OBAMA FINDS FOOTING OBAMA FINDS FOOTING



One year after exchanging pleasantries with a newly-inaugurated President Donald Trump and ascending onto Marine One for the final time, former President Barack Obama has remained a central figure across the United States and global political scene. As his successor has seemed to systematically target key components of his legacy, Obama has been strategic, according to current and former aides, in choosing when and how to speak out.

He's watched the year's political developments closely from Chicago and his home in Washington D.C., which sits just miles up the road from the White House. He's made global excursions to mentor young adults, delivered paid and unpaid speeches and hunkered down to write his post-presidency book, while coordinating the operations of his foundation and presidential library. The Obama's have spent much time in Chicago where the foundation is located, spending time nurturing young politicians and teaching the importance of civic engagement.

"He has rolled up his sleeves and really worked hard to make sure [the foundation] reflects his values and his priorities," former White House senior adviser Valerie Jarrett told ABC News. "Civic engagement he thinks its so incredibly important for young people to recognize their responsibilities as citizens and that that should begin at a young age because it should be a lifelong passion and so anything he can do to mobilize that effort is important."

Despite watching his signature achievements unravel, Obama has been described as "upbeat" and "optimistic." But that positivity doesn't come without some anxiety.

"Of course it causes anxiety just like it does for so many people," former White House senior adviser Valerie Jarrett told ABC News. "He's never looked at it from the perspective of him — his legacy — he's looked at it from the perspective of the people whose lives he tried to improve. So if he thinks that people will lose healthcare or that young DACA folks will be at risk and potentially lose . . Continuation in page 33 . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Office of the Prime Minister
# Transnational Government of Tamil Eelam
# நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
# பிரதம அமைச்சர் அலுவலகம்

875 Avenue of the Americas, Suite 906
New York, NY 10001, USA

www.tgte.org
pmo@tgte.org

21-01-2018

<u>கனடாவில் இடம் பெற்ற நேரடி அரசவைக் அமர்வில் பிரதமர் விசுவநாதன் ருத்ரகுமாரன் அவர்கள் காணொளி வாயிலாக ஆற்றிய நிறைவுநாள் உரை அனைவருக்கும் வணக்கம்!</u>

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாவது அரசவைக்காலத்தின் எட்டாவது அமர்வினை நிறைவு செய்யும் நேரத்தினை நாம் அண்மித்திருக்கிறோம். கடந்த 3 நாட்களாக நாம் கூடியிருந்து ஈழத் தமிழர் தேசத்தின் சுதந்திரவாழ்வு தொடர்பான பல்வேறு விடயங்களைப் பற்றி விவாதித்திருக்கிறோம். ஆராய்ந்திருக்கிறோம். நான் எனது ஆரம்ப உரையில் குறிப்பிட்டவாறு நாம் இந்த அமர்வுகளின் ஊடாக ஜனநாயக வழிமுறையில் செயற்படுவதற்குரிய அடிப்படைப் பண்பினை படிப்படியாக வளர்த்து வந்திருக்கிறோம். இந்த அமர்வும் அதனை உறுதிப்படுத்தியிருக்கிறது. இன்றைய அமர்வில் பங்குபற்றிய அனவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்வடைகிறேன்.

இன்றைய அமர்வில் நேரடியாகவும் காணொளி ஊடாகவும் பங்கு கொண்ட பேராளர்களின் கரங்களை நான் தோழமை உணர்வுடன் பற்றிக் கொள்கிறேன். இவர்கள் தமது சிறப்புரைகளின் ஊடாகத் தெரிவித்த கருத்துகள் அனைத்தும் ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக நடாத்தும் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்திருந்தன. கனடிய மனித உரிமைத்துறை சட்ட வல்லுனரும் பேராசிரியருமாகிய ஷாரி ஐகேன் அவர்கள் வழங்கிய உரையில் கனடிய உள் நாட்டு நீதிமன்றங்களில் போர்க்குற்றம் புரிந்தோருக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கான் வாய்ப்புக்களையும் தடைகளையும் பற்றிப் பேசினார். ருவாண்டா நாட்டு இனப்படுகொலை தொடர்பாக கனடா நாட்டில் வைத்துக் குற்றம் சாட்டப்பட்டு தண்டனைபெற்ற ஒரு போர்க் குற்றவாளியினது உதாரணத்தை சுட்டிக்காட்டிய அவர் ஒரு நாட்டினை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கு கனடாவில் வழக்கத்தில் உள்ள அரசுகளுக்கான பாதுகாப்பு சட்டம் இடம் கொடாது என்பதையும் தெரிவித்தார்.

இந்நிலையில் அவரது ஆலோசனைக்கமைய இப்பாது காப்பு சட்டத்தில் இனப்படுகொலை சித்திரவதை என்பவற்றை உள்ளடக்கிய சர்வதேச குற்றங்களை விதிவிலக்காக பார்க்கும் வகையிலான ஒரு போராட்டத்தை கனடா நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினரும் பிற செயற்பாட்டாளர்களும் மேற்கொள்ள வேண்டுமென நான் வேண்டுகிறேன். அத்தகைய போராட்டம் ஈழத்தமிழருக்கு மட்டும் அல்லாமல் கனடாவில் வாழும் மறு இனத்தினருக்கும் மானிடத்துக்கும் நன்மை தரும் ஒரு விடயமாக அமையுமென நான் நம்புகிறேன். மேலும் தமிழீழத்தின் மூத்த அரசியல் அறிஞர் திருநாவுக்கரசு அவர்களும் பேராசிரியர் மணிவண்ணன் அவர்களும் தமது உரையில் தமிழர் தாயகப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமாக இருப்பதனை பிரகடனப்படுத்தியிருந்தனர். இது ஒரு முக்கியமான அரசியற்பார்வையாகும். தமிழீழ மக்களின் தாயகப்பிரதேசத்தையும், தமிழர்தம் வாழ்வினையும் சிங்கள தேசம் ஆக்கிரமித்து நிற்கிறது. இலங்கைத்தீவு ஒரே அரசாகவும் ஒற்றையாட்சி அரசாகவும் பிரித்தானியர்களால் மாற்றப்பட்ட பின்னர், பிரித்தானியரின் புவிசார் அரசியல் அணுகுமுறையும் சிங்களத் தலைவர்களின் இராஜதந்திரமும் ஒருங்கே இணைந்து கொள்ள சுதந்திரத்தின் பின்னரான இலங்கைத்தீவு சிங்கள் தேசத்தின் மேலாண்மைக்குள் சிக்கிக் கொண்டது. சிங்கள தேசம் தமிழர் தேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டமையினைத்தான் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையின் அடிப்படையாக நாம் கொள்ள வேண்டும். சிங்கள தேசத்தின் மேலாண்மையின்கீழ் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புகளை பிரித்தானியர் இலங்கைத்தீவினை விட்டு வெளியேறிய அதே காலத்திலேயே தமிழர் தலைமைகள் நிராகரித்திருக்க வேண்டும். தமிழர் இறைமையினைத் தமிழர்களிடமே விட்டுச் செல்லுமாறு வலியுறுதியிருக்க வேண்டும்.

ஆனால், அன்றைய தமிழர் தலைமைகள் தமிழர் தேசத்தை, தமிழர் தாயகத்தை தமிழர்களின் இறைமைக்குரிய பகுதியாக நோக்காது முழு இலங்கைத்தீவுக்கு உட்பட்டதாகவும் இலங்கையர் என்று ஒரு பொது மக்கள் கூட்டத்துக்குரியதாகவும் அணுகினர். இது கொழும்புடன் பிணைக்கப்பட்ட அவர்களது அரசியல் நலன்களோடும் தூரநோக்குப்பார்வையின்மையினோடும் தொடர்பு பட்டதாக அமைந்தது. சிங்களதேசத்தின் மேலாண்மைக்கு உட்பட்ட அரசியலமைப்பின் பகுதியாக ஈழத் தேசம் உட்படுத்தப்பட்ட போது நாம் அரசியல்ரீதி யான சுதந்திரத்தை சிங்கள தேசத்திடம் இழந்து விட்டோம். இதன் தொடர்ச்சியாகவே சிங்கள தேசம் தமிழர் தேசத்தை விழுங்கி ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இதற்கான தமிழினவழிப்புத் திட்டத்தையும் வகுத்துக் கொண்டது. சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பையும் தமிழர் தாயகப் பிரதேசம் மீது மேற் கொண்டது. தமிழீழத் தேசியத்தலைவரது தலைமையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு நடாத்திய ஈகமும் வீரமும் நிறைந்த விடுதலைப் போராட்டம் இழந்த தமிழரின் இறையாண்மையினைத் தமிழர் தம் கைகளில் மீளப் பெறும் சாதனையை நிகழ்த்தியது. தமிழர் தாயகப்பிரதேசத்தில் தமிழர்களின் நடைமுறையரசு அமைக்கப்பட்டது. ஆனால் இலங்கைத்தீவினை ஒரு அரசாகப் பேணுவதே தமது புவிசார் மற்றும் பூகோள நலன்களுக்கு உகந்தது எனக் கணிப்பிட்ட உலகின் பலமிக்க அரசுகளுடன் சிறிலங்கா அரசு கூட்டுச் சேரந்து தமிழீழ நடைமுறையரசினைச் சிதைப்பதில் வெற்றி கண்டது. தற்போதய சூழலில் யதார்த்தம் என்ற பெயரில் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்குள் தமிழர் தாயகத்தை நிலையாகச் சிக்க வைக்கும் முயற்சிக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழர் தலைமைகள் துணைபோவதை நாம் வேதனையுடன் அவதானிக்கிறோம். தமிழர்களை அடிமைப்படுத்தும் சிங்களத்தின் முயற்சிக்குத் துணைபோக வேண்டாம் என நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களை வேண்டிக் கொள்கிறோம். யதார்த்தம் என்பது எமது உண்மையான நிலையை நாம் மதிப்பிட்டுக் கொள்வதாகத்தான் இருக்க முடியும். தமிழ் மக்களின் தாயகப்பகுதியினைச் சிங்களம் ஆக்கிரமித்திருப்பது எமது யதார்த்தம். தமிழர் நிலங்களைச் சிங்களம் கபளீகரம் செய்வதும் யதார்த்தம். சிங்கள ஆயுதப்படையினர் தமிழர் தாயகப்பகுதியில் குவிந்திருப்பது யதார்த்தம். இலங்கைத்தீவினைப் பௌத்த நாடாக சிங்களம் பேண முனைவது யதார்த்தம். தமிழர் தேசத்தை சிங்களம் இனவழிப்பு செய்ய முனைவது யதார்த்தம்.

சிங்களப் பாராளுமன்றத்தின் ஊடாகத் தமிழ் மக்கள் தமது உரிமையினைப் பெறமுடியாது என்பதும் எமது யதார்த்தம். யதார்த்தம் பற்றிப் பேசுபவர்களிடம் நான் கோர விரும்புவது இதுதான். நான் இங்கே குறிப்பிட்டுள்ள யதார்த்தங்களைக் கவனத்தில் எடுங்கள். இந்த யதார்த்தங்களை நாம் எவ்வாறு கையாளப் போகிறோம் எனச் சிந்தியுங்கள். இந்த யதார்த்தங்களைக் கையாளவென எம்மை அரசியல் அடிமைகளாக்கும் வழிமுறையினைத் தேர்ந்தெடுக்காதீர்கள். இவ்வாறு நாம் செய்வோமாயின் எமது இன்றைய தலைமுறைக்கு மட்டுமின்றி எமது எதிர்காலத் தமைமுறைகளுக்கும் தவறிழைத்தவர்களாக நாம் இருப்போம். துரோகம் செய்தவர்களாக இருப்போம். தயவு செய்து இந்த அடிமைப்பாதையில் இருந்து விலகி சுதந்திரவாழ்வு தேடும் ஒரு அரசியற்பார்வையினைத் தேர்ந்தெடுங்கள். தமிழர் தலைவிதியினைத் தமிழரே தீர்மானிக்க வேண்டும் என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் அரசியல் விருப்பு. இந்த அரசியல்விருப்பினை தமிழ் மக்கள் தமக்காகத் தாமேதான் வெளிப்படுத்த முடியும். வெளிப்படுத்த வேண்டும். ஒரு மக்கள் கூட்டம் தமது அரசியல் விருப்பினை தெளிவாக, ஒருமித்தவகையில் வெளிப்படுத்துவதுதான் அந்த அரசியல் விருப்பினை அடைந்து கொள்வதற்கான வாய்ப்பினை அவர்கட்கு எதிர்காலத்திலாவது வழங்கும். இந்த அரசியல் விருப்பை நாம் உறுதியாக வெளிப்படுத்துவது நமது தலைமுறைக்கு மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறையின் அரசியற்செயற்பாட்டுக்கும் அவசியமானதாகும்.

இந்த வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுக்கும் தமிழர் தலைவிதி தமிழர் கையில் எனும் பொதுவாக்கெடுப்புக்கான மக்கள் இயக்கத்தினை வலுவாக வளரத்தெடுத்தல் மிக முக்கியமானதாகும். தோழர்களே! இப்போது நாம் இந்த அமர்வினை நிறைவு செய்துகொண்டு நாம் வாழும் நாடுகளுக்குத் திரும்பும் நேரம் நெருங்கி விட்டது. இங்கு எம்மிடம் கையளிக்கப் பட்டுள்ள கடமைகளை எம் தோழ்களில் சுமந்தவாறு திரும்புகிறோம். செய்ய வேண்டிய செயற்திட்டங்கள் பற்றியும் அவை கோரும் எமது அர்ப்பணிப்பையும் உழைப்பையும் உணர்ந்தவாறு திரும்புகிறோம். விடுதலைப் போராட்டப்பணி என்பது ஒரு ஓய்வு நேரப்பணியல்ல. நேரம் கிடைக்கும் போது மட்டும் செய்வதொன்றும் அல்ல. நாம் நமக்குக் கிடைக்கக்கூடிய அனைத்து வாய்ப்புக்களையும் இப் பணியுடன் இணைக்க வேண்டும். எமது மக்கள் எம்மீது நம்பிக்கை கொள்ளும் அளவுக்கு நாம் முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும். தெளிவான கருத்துகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட செயலும், அச் செயலை நிறைவேற்றி முடிக்கும் ஆற்றலும்தான் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை வளர்த்தெடுக்கும். போராட்டத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் பங்காற்றும். மாவீரர் கனவை நெஞ்சில் சுமந்தவர்று எமது கடமைகளை நாம் செயல்முனைப்புடன் ஆற்றுவோம் என நாம் உறுதி எடுத்துக் கொள்வோமாக!

நன்றி
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Continuation of page 31 . . their status, sure that's extraordinarily and profoundly troubling to him." Just two days before the transfer of power was carried out on the steps of the US Capitol, Obama outlined to reporters in his final news conference the actions a Trump administration could take that might spur him to break with the precedent of polite silence previous presidents typically extended to their successors. "There's a difference between that normal functioning of politics and certain issues or certain moments where I think our core values may be at stake," Obama said. In a year's span, President Obama spoke out four separate times with vocal objection to a policy being pursued by President Trump and the GOP-led Congress, including twice regarding the Republicans' failed effort to repeal and replace the Affordable Care Act, President Trump's announcement of U.S. withdrawal from the Paris Climate Agreement and the administration's rescission of legal protections for nearly 800,000 'DREAMers.'

But Obama was notably restrained in going after Trump directly regarding several other highly controversial moments in his first year, including the botched rollout of his first travel ban, his response to the white supremacist violence in Charlottesville and his accusation that Obama illegally wiretapped him during the election. "I think you saw him kind of do that deftly and strategically this past year," one aide said. "When it comes especially to the president's political involvement but certainly all of this other stuff, he's keenly aware that there's nothing more that President Trump would like than to make Obama his foil."

Matthew Dallek, a political historian and associate professor at George Washington University's Graduate School of Political Management, pointed out that Obama wasn't necessarily alone in breaking with the quiet deference that presidential successors typically extend to the acting president. In October, former President George W. Bush delivered a rare public speech in New York City in which he didn't call Trump out by name, but seemed to make multiple references to his effect on American political discourse. "Bigotry seems emboldened. Our politics seems more vulnerable to conspiracy theories and outright fabrication," Bush said. "We've seen nationalism distorted into nativism." "What he said then may have been harsher than anything he said about Barack Obama during the eight years of his presidency," Dallek said. "I think it's a bit unusual but I think the sense is among not just Barack Obama that it is incumbent upon them to speak out against Trump when they think it's appropriate." Notably, Trump and Obama have not spoken since Inauguration Day, a sharp contrast from past presidents who have at times seeked counsel from their predecessors.

## TGTE SURESNATH RATNABALAM DEPORTED

A senior member of the Transnational Government of Tamil Eelam (TGTE) Suresnath Ratnabalam was deported along with his family. They left Bandaranaike International Airport (BIA) during the early hours of yesterday morning, officials said.

Ratnabalam and his family were placed on a Bangkok bound SriLankan Airlines flight after he was refused entry into the country as he is blacklisted. The family arrived at the BIA on Thursday afternoon on a scheduled Etihaad flight from Abu Dhabi.

His family was however, permitted to enter the country but they opted to stay with him.

According to officials several top Ministers had applied pressure on Immigration authorities to revoke the deportation order also known as an XForm, but without success.

Immigration authorities had insisted that the Ministers should make the request in writing, but all of them declined, and Ratnabalam was finally sent out of the country.

Even during his stay at the BIA the whole family were provided with VIP treatment for reasons known only to those that were interested in getting him and the family into the country, the officials explained.

They said that in a case of a deportation the individual or individuals are kept in a designated detention centre until they are put on a flight.

However, in this case Ratnabalam and his family were provided with hotel accommodation inside the airport which is not standard procedure, they added.

According to the officials Ratnabalam is an elected member of the so-called TGTE based in Toronto, Canada and has been highly critical of the Government of Sri Lanka at several international forums.

He along with scores of others of the Tamil Diaspora were banned from entering the country by the previous regime.

Meanwhile, head of the TGTE, Visuvanathan Rudrakumaran in an email response to this newspaper stated: "The TGTE's Constitution mandates that the realization of our political goal, namely the establishment of an Independent State should be done through peaceful means and there has never been a single allegation that the TGTE is involved in violent activities.

"We are aware, however, that our idea is very powerful. The Sri Lankan Government's action demonstrates its fear of our ideas. It is unfortunate and sad to see the foolishness of the Sri Lankan Government believing that, in this technological era, ideas can be blocked simply by barring an individual entering the country."

## "வடக்கு, கிழக்கில் இந்தோனேசியா முதலீடுகளை செய்ய உறுதிசெய்ய வேண்டும்"



யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கிலுள்ள மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்தோனேசியா முதலீடுகள் செய்வதனை உறுதிப்படுத்த வேண்டும் என்று இந்தோனேசிய ஜனாதிபதி ஜோக்கோ விடோடோவிடம் எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். நீண்டகால யுத்தத்தின் காரணமாக பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்நிலையினை சீர்செய்வதற்கு சர்வதேசத்தின் உதவி தேவையாவுள்ளது. இதன்போது இந்தோனேசிய ஜனாதிபதி, இலங்கையின் நாட்டை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முன்னெடுப்புகளுக்கும் மற்றும் வளங்களை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கும் இந்தோனேசியா தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என்றார். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தோனேசிய ஜனாதிபதி ஜோக்கோ விடோடோவிற்கும் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு இன்று புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## POLICE RAIDS ACROSS SRI LANKA – 758 WARRANTED SUSPECTS ARRESTED

Police conducted a raid which covered all police divisions in Sri Lanka. The raid commenced at 11 p.m. and ended around 3 a.m. on Saturday, November 11.

The raid was carried out by 16,362 police officers, under the directive of IGP Pujith Jayasundara.

During the raid:
5744 vehicles were checked
962 persons were arrested on suspicion
948 raids were carried out to crack down on illicit liquor
758 warranted suspects were arrested
86 suspects of criminal activities were apprehended
three weapons were discovered



கொழும்பைச் சேர்ந்த திரு. ஜோசெப் ஜெகன் செபஸ்தியான் என்னும் நபரை பொலீஸார் தேடி அவரின் வீட்டிற்குச் சென்று விசாரித்துள்ளார்கள். இவர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கொழும்பில் ஆதரளித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அண்மையில் தலைவர் பிரபாகரனின் புகைப்படம் வைத்திருந்தாக இருவர் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். விடுதலைப்புலிகள் அமைப்பில் தொடர்புபடுத்தி இவரையும் சம்பந்தப்பட்டவராக பொலிஸாரின் தேடுதல்ப் பட்டியலில் இணைத்துள்ளார்கள்.

கடந்த டிசம்பர் 30ம் திகதி நடைபெற்ற தேடுதலின் போது இவரைத்தேடி இவரின் வீட்டிற்குச் சென்று இவரின் குடும்பத்தினரை அச்சுறுத்தும் வகையில் புலனாய்வுத் துறையினர் விசாரணை செய்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மூலோபாயங்களை வகுத்துக் கொண்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமர்வு!

கனடாவில் மூன்று நாட்களாக இடம்பெற்றிருந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வு பல்வேறு நிறைவுகண்டுள்ளது.

நா.தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாம் தவணைக்காலத்தில் இடம்பெற்ற எட்டாவது நேரடி அரசவை அமர்வாக இது கடந்த வாரம் மார்கம் பகுதியில் வன்னிவீதியில் அமையப் பெற்றுள்ள நகர மண்டபத்தில் சனவரி 19-20-21 ஆகிய நாட்களில் ரொறன்ரோவில் இடம்பெற்றிருந்தது.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் அரசவை உறுப்பினர்கள் பங்கெடுத்துக் கொண்டதோடு, மேற்சபை உறுப்பினர்கள், மதியுரைக்குழு உறுப்பினர்கள் என பல்வேறு வளப்பிரதிநிதிகள் இந்த அமர்வில் நேரடியாக பங்கெடுத்திருந்தனர்.

அரசியல், இராஜதந்திர வழிமுறையில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடும் அமைப்புகள் தமது அமைப்பு வடிவத்தையும், செயற்பாடுகளையும் ஜனநாயக வழிமுறைக்கு உட்பட்டதாக ஒழுங்கமைத்துக் கொள்ளல் அடிப்படை அறம் சார்ந்தும்,அரசியல் மூலோபாயம் சார்ந்தும் அவசியமானதாகும் என தொடக்க நாள் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். ஒவ்வொரு அமைச்சுக்களினதும் மையங்களினதும் செயற்பாட்டறிக்கை, மேற்சபை உறுப்பினர்களின் கருத்துரைகள், பிரேரணைகள் என பல்வேறு விடயங்கள் அவையில் சமர்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. அரசியல் ஆயவறிஞர் மு.திருநாவுக்கரசு, பேராசிரியர் மணிவண்ணன், சட்டப்பேராசிரியர் செறி ஏய்கன், கனேடிய தமிழ் அரசியல் பிரமுகர் நீதன் சான் ஆகியோரது கருத்துரைகளும் இடம்பெற்றிருந்தன. சமகால நிலைமைகளுக்கு அமைய நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வகுத்துக் கொள்ள வேண்டிய அரசியல் மூலோபாயங்கள் குறித்து முடிவுகள் எட்டப்பட்டிருந்தன.

எமது தாயகத்தின் விடுதலையை வென்றெடுப்பதிலும் கனடாவாழ் தமிழ் மக்கள் பெரும்பங்கு வகிக்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டவர்களாக இருக்கின்றனர் எனத் தெரிவித்திருந்த பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள், கனடாவில் கிடைக்கக்கூடிய அரசியல் வெளியை,கிடைக்கக் கூடிய அரசியல் வலைப்பின்னலை தாயகமக்களின் அரசியல் விடுதலைக்கு உறுதுணையாக்கும் வகையில் நாம் செயற்படவேண்டும் என கனேடிய தமிழ் சமூகம் நோக்கி கருத்துக்களை பகிர்ந்திருந்தார்.
அமர்வு இடம்பெற்றிருந்த சமவேளை, தமிழர் திருநாளை கொண்டாடும் மரபுத்திங்கள் நிகழ்வும், பொதுக்கூட்டடும் இடம்பெற்றிருந்தன.

மூன்று அமர்வினை நேரடியாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் கண்டுகொண்ட பொதுமக்கள் மற்றும் பல்வேறு தமிழ் சமூக பிரதிநிதிகள், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மீது புதிய நம்பிக்கை வந்துள்ளதோடு ,தமிழீழத்தினை வென்றடைவதற்கான திசையினை தெளிவாக முன்வைத்திருந்தாக கருத்துரைத்துள்ளனர்.

\- நாதம் ஊடகசேவை






ஐரோப்பாவின் முதல் 24 மணிநேர தமிழ் வானொலி
ரீஆர்ரி தமிழ் ஒலி

தமிழ் ஒலி
உலக தமிழர்களை ஒன்றிணைக்கும் வானொலி

தேசம் கடந்தாலும் வீசும் காற்றாக உங்கள் வாசல் தேடிவரும் வானொலி
ரீஆர்ரி தமிழ் ஒலி

FACE



உங்கள் TRT தமிழ் ஒலியில் வணக்கம் தமிழ்ஒலி, காலைப் பூந்தென்றல், வானொலிக் குறுக்கெழுத்துப்போட்டி, இசையும் கதையும், வியாழன் ஞாயிற்றுக்கிழமைகளில் அரசியல் சமூகமேடை (துல்லியமான பக்கசார்பற்ற அரசியல் ஆய்வு), சங்கமம், பாடுவோர் பாடலாம், உதவுவோமா?, தாயக உறவுகளைக் கைவிடமாட்டோம், சமூகப்பணி. நிகழ்ச்சி : பாட்டும் பதமும், சமைப்போம் ருசிப்போம், இராக்கோழி இன்னும் பல நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டு மகிழலாம்.

www.tamilolli.com

செயற்கைக்கோள் ஒலிபரப்பு,
EUTELSAT Eurobird 9A
Frequency N° 11919 H (Horizontal)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்



**பிற சன்னதிகள்**

கடந்த இதழின் தொடர்ச்சி . .

தெருக்களுக்கு தமிழ் மாதப் பெயர்கள்

மதுரை மீனாட்சியம்மன் கோயிலை தாமரை மொட்டைப் போல் வைத்துக் கொண்டால் அதைச் சுற்றியுள்ள தெருக்களை தாமரை இதழ்களாகக் கூறலாம். மீனாட்சியம்மன் கோயிலுக்குள் இருக்கும் வீதிகளுக்கு ஆடி வீதி என்று பெயர். அதைத் தாண்டி கோயிலுக்கு வெளியில் சித்திரை வீதிகள், சித்திரை வீதிகளுக்கு அடுத்த வீதிகள் ஆவணி வீதிகள், அதைத் தாண்டி வெளியே வந்தால் மாசி வீதிகள். அதையும் தாண்டி வெளி வீதிகள் என மதுரை நகர் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தெருக்களுக்கு தமிழ் மாதங்களின் பெயர் வைக்கப்பட்டிருப்பதற்கும் ஒரு காரணம் உள்ளது. மன்னர்கள் காலத்தில் குறிப்பிட்ட மாதங்களில் நடைபெறும் விழாக்கள் அந்த மாதங்களின் பெயரிலான தெருக்களில்தான் நடைபெறும்.

சிறப்பு விழாக்கள்

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் சித்திரைத் திருவிழா, முடிசூட்டுவிழா, திக்விஜயம், திருக்கல்யாணம், தேரோட்டம், புட்டுத் திருவிழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் இந்தக் கோயிலில் தமிழ் மாதம் ஒவ்வொன்றிலும் சிறப்பு விழாக்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

**சித்திரை**

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் சித்ரா பௌர்ணமி விழா கொண்டாடப்பட்டாலும், மதுரையில் தான் சித்ரா பௌர்ணமி விழா சிறப்பாக கருதப்படுகிறது. ஒருமுறை விருத்திராசூரன், விஸ்வரூபன் என்ற இருவரை இந்திரன் கொன்றான். அவர்கள் பிறப்பால் அந்தணர்கள் ஆனதால் இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அதிலிருந்து விடுபட தன் குருவை நாடி உபாயம் கேட்டான். குருபகவான் அவனிடம் பூலோகம் சென்று பல்வேறு சிவஸ்தலங்களில் வழிபட்டால் ஓரிடத்தில் உன் கெடுதல் நீங்கும் என்று கூறினார். அதன்படி இந்திரன் காசி முதலிய பல ஸ்தலங்களில் வழிபட்டு தெற்கு நோக்கி வந்தான். ஓரிடத்தில் கடம்ப மரத்தின் கீழ் சென்றவுடன் தன்னைப் பற்றியிருந்த தோஷம் விலகக் கண்டான். இந்திரன் மகிழ்ச்சியடைய அவன் முன் கடம்ப மரத்தடியில் சிவபெருமான் திருஆலவாய் சோமசுந்தரர் அவனுக்கு காட்சி கொடுத்தார். இந்திரன் சிவபெருமானுக்கு கோவில் கட்ட நினைத்து தேவலோகத்தில் இருந்து ஒரு விமானம் வரவழைத்தான். இத்தலத்து இறைவனுக்கு இந்திரன் விமானம் அமைத்ததால் அதற்கு இந்திர விமானம் என்றும், விண்ணில் இருந்து வந்ததால் விண்ணிழி விமானம் என்றும் சொல்லப்படுகிறது. ஆலயம் எடுத்த இந்திரனிடம் ஒவ்வொரு வருடமும் சித்ரா பௌர்ணமி நாளில் என்னை இங்கு வந்து வழிபடுக என்று கட்டளையிட்டார். அதன்படி ஒவ்வொரு வருடமும் சித்ரா பௌர்ணமி நாளில் இந்திரன் இங்கு வந்து வழிபடுகிறான் என்று திருவிளையாடல் புராணம் கூறுகிறது. அதனால் தான் சித்ராபௌர்ணமி மதுரையில் சிறப்பாகக் கருதப்படுகிறது.

வைகாசி மாதம் கோடை வசந்தத் திருவிழா. திருவாதிரை நட்சத்திரத்திலே இருந்து பத்து நாட்கள் எண்ணெய்க்காப்பு நடக்கிறது.

ஆனி மாதம் மகம் நட்சத்திரத்திலிருந்து ஊஞ்சல் உற்சவம். தினமும் மாலை ஆறு மணியிலே இருந்து இரவு ஒன்பது மணி வரைக்கும் நூறு கால் மண்டபத்திலே ஒரே ஊஞ்சலில் சுந்தரேசுவரரோடு மீனாட்சி அமர்ந்து ஊஞ்சலாட, கோயிலின் ஓதுவார்கள், மாணிக்கவாசகரின் பொன்னூஞ்சல் பாடல்களைப் பாட ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகிறது.

ஆடி மாதத்தில் ஆயில்ய நட்சத்திரம் துவங்கி பத்து நாளைக்கு முளைக்கொட்டு உற்சவம் நடைபெறுகிறது. கொடியேற்றம் மீனாட்சிக்கு மட்டுமே நடைபெறும்.

ஆவணி மாதம் மூலத் திருநாள், ஆவணி மூலஉற்சவம் என்றே பெயர் பெற்றது. நான்கு ஆவணி வீதிகளிலும் அம்பாளும், சுந்தரேசுவரரும் வீதி உலா வருவார்கள். கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம், வளையல் விற்ற திருவிளையாடல், பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல், நரியைப் பரியாக்கியது, விறகு விற்றல் போன்ற திருவிளையாடல்கள் நடைபெறும். மூல நட்சத்திரத்தன்று சுந்தரேசுவரருக்குப் பட்டாபிசேகம் நடைபெறுகிறது.

புரட்டாசி மாதத்தில் நவராத்திரி கொலு. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரத்தில் மீனாட்சி அலங்கரிக்கப்படுகிறார்.

ஐப்பசி மாதப் பிரதமையிலிருந்து (அமாவாசை நாளிற்கு அடுத்த நாள்) (சஷ்டி) (அமாவாசை நாளிலிருந்து ஆறாவது நாள்) வரையிலும் கோலாட்ட உற்சவம். புது மண்டபத்திலே அம்மன் கொலுவிருந்து, மதுரை இளம்பெண்கள் கூடியிருந்து கோலாட்டமாட, உற்சவம் நடக்கிறது.

கார்த்திகை மாதம் பத்து நாட்கள் தீப உற்சவம். கார்த்திகை தீபதினத்தில் அம்மன் சந்நதியிலும், சுந்தரேசுவரர் சந்நதியிலும் சொக்கப் பனை கொளுத்தப்படுகிறது.

மார்கழி, தனுர் மாத வழக்கப் படி காலையில் சீக்கிரமே நடை திறந்து இரவு ஒன்பது மணிக்கு நடுநிசி முடிந்து விடுகின்றது. தினமும் வெள்ளியம்பல நடராசர் சந்நதியில் மாணிக்கவாசகர் முன்பாக கோயிலின் ஆஸ்தான ஓதுவார்கள் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிப்போற்றுவார்கள். அதிகாலை ஐந்தரை மணியில் இருந்தே இது நடக்கும். இதில் பத்து நாட்கள் எண்ணெய்க் காப்பு நடக்கும். இந்தப் பத்து நாட்களும் சுவாமியும், அம்பாளும் புறப்பாடு கிடையாது. மாணிக்கவாசகர் புறப்பாடு மட்டுமே நடைபெறும். பதினோராம் நாள் ரிஷபாரூடராய் அம்பாளோடு சுவாமி ஆடி வீதியில் வலம் வருகிறார்.

தை தை மாதம். தெப்பத் திருநாள் நடக்கும். திருமலை நாயக்கரால் தோண்டப்பட்டியூர் தெப்பக் குளத்தில் தெப்பம் கட்டி சுவாமியையும், அம்பாளையும் அதில் எழுந்தருளச் செய்து தெப்போற்சவம் நடைபெறுகிறது.

மாசி, பங்குனி இந்த இரண்டு மாசத்துக்கும் சேர்த்து மண்டல உற்சவம் நடக்கிறது. நாற்பத்து எட்டு நாட்கள் நடக்கும் இந்த உற்சவம் கொஞ்சம் பெரியது.

பங்குனி உத்திரம், சாரதா நவராத்திரி இரண்டும் சேர்ந்து வரும் திருவிழா. பங்குனி மாதக் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து உத்திரம் நட்சத்திரம் வரை அம்பாளும், சுவாமியும் வெள்ளியம்பலத்திலே அமர்ந்து பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பார்கள். சுவாதி நட்சத்திரத்தன்று இருவரும் மகனின் திருமணக் கோலம் காண திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்கள்.

மேலும், இங்கு தினசரி பூசைகள் செய்யப்படுவதுடன் சிவபெருமானுக்கு உகந்த நாட்களாகக் கருதப்படும் அனைத்து நாட்களிலும் சிறப்புப் பூசைகள் செய்யப்படுகின்றன.

அடுத்த இதழில் தொடரும் . . .


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியம்
S.L. சகாதேவராஜூ (கண்ணா)
ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியசாலையில்,
கைநாடி பார்த்து உங்கள் சகலவிதமான நோய்களுக்கும்,
இயற்கை மூலிகை வைத்தியப்படி நீர்த்து வைக்கப்படும்.
தலைமுறை தலைமுறையாய் செய்யும் வைத்தியம், இப்பொழுது லண்டனில்


- ஆஸ்த்மா
- தும்மல்
- புற்றுநோய்
- நீரிழிவு
- எக்சிமா
- மாதவிடாய் பிரச்சனை
- ஆண்மை குறைவு
- தோல்வியாதி (கடி)
- முடி உதிர்தல்
- இரத்த அலர்ஜி
- தலைவலி
- பக்கவாதம்
- குடற்புண்
- மூட்டுநோய்
- இடுப்புவலி
- பயம்

மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி,
பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியும்.
Unit-12 Chandani Bazar
29/33 , Ealing Road, Wembley, Middlesex, London, HA0 4YA
Tel:- 07448 55 48 48
Contact in India: 0091 809 609 1166 & 0091 809 609 6633
Email: andhraguruji@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOMELAND LIFELINE LTD

## BASELY CREDIT SCORE ARE ALSO WELCOME

SECURED LOAN ON
RESIDENTIAL PROPERTY & COMMERCIAL PROPERTY

### BUSINESS DEVELOPMENT

1] Starters up to £30.000 without security.

2] Any overdraft facilities up to £50.000 depend on the turn over.

3] L.C depend on the import invoice value. (Less than 10% Margin)

4] Working Capital up to £200.000, depend on the turn over in last six month and the strength to proof the turnover.

5] Commercial Loans and Mortgages. LTV start from 70%.

Up to 65% from High Street lenders depend on status, Interest rate start from 3.45%.

6] Personal Loan: We won't do it.
But we can help to get from the companies and the rate ranging from 4% to 36%.

7] We also introduce Residential mortgages and Buy to let mortgages from our friendly companies who are independently authorised.

### வியாபார அபிவிருத்தி

அனைத்து வகையான கடன்களையும்
எம்மூலமாக நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எமது நிறுவனம் வங்கிகளுடனும் கடன்
கொடுக்கும் தனியார் நிறுவனங்களுடனும்
நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கின்றது.

அதன் அடிப்படையில் நீங்கள் விரும்பும்
வகையில் உங்கள் நிதி நெருக்கடியை
அல்லது கடன் பிரச்சனையைத்
தீர்ப்பதற்கு நம்பிக்கையுடன்
நாடவேண்டியது எமது நிறுவனம்.

அதிகூடிய வட்டியில் கடன் பெற்றிருப்பவர்கள்
எம்மை நாடி குறைந்த வட்டி வீதத்தில்
புதிய கடனைப் பெற்று பழைய கடன்
தொல்லையிலிருந்து விடுபடலாம்.

நீங்கள் உங்கள் நிதிப் பிரச்சனைகளைத்
தீர்க்க நம்பிக்கையுடன் எமது சேவையை
எதிர்கொண்டால் நிச்சயமாக உங்கள் பணத்
தேவை நிவர்த்தி செய்யப்படலாம்.

**உங்கள் தேவை - நம்பிக்கை**
**எங்கள் சேவை - உத்தரவாதம்**

## WE HAVE FURTHER MORE SERVICES

## PLEASE CONTACT US FOR MORE INFORMATION & DETAILS

# CALL TODAY : 079 0843 7921

Address: 1 Lancelot Parade,Lancelot Road, Wembley, HA0 2AJ. United Kingdom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TGTE'S PARLIAMENT MEETS IN CANADA

Transnational Government of Tamil Eelam's (TGTE) 8th Sitting of its 2nd Parliament will be held from January 19th to 21st in Toronto, Canada. The Sitting will be Live Streamed.

TGTE Members of Parliament from around the world along with TGTE Members of the Senate, Advisory Committee, Ethics Commission, and Election Commission, will be attending.

It is expected that there will be a discussion on the impact of the upcoming local government elections and the Sri Lankan Government's Interim Constitutional proposal on the Tamil national struggle to realize right to self-determination and to secure remedial justice.

TGTE Cabinet Ministers will submit their reports about the progress of their respective ministries to the Parliament for discussion and approval. TGTE's annual budget will also be submitted to the Parliament.

Discussions will be also held about bringing legal actions under Universal Jurisdiction in various domestic judicial tribunals.

Several international dignitaries are attending and will speak during the opening Session.

Announcement in Tamil: http://www.tamilwin.com/community/01/171299

** NOTE: The Session will be LIVE-STREAMED from Friday (19th) morning to Sunday (21st) afternoon (CANADA TIME).

** LINK: https://www.youtube.com/watch?v=nYP1-w6YM74&feature

**ABOUT TRANSNATIONAL GOVERNMENT OF TAMIL EELAM (TGTE):**
Transnational Government of Tamil Eelam (TGTE) is a democratically elected Government of a million strong Tamils (from the island of Sri Lanka) living in several countries around the world. TGTE was formed after the mass killing of Tamils by the Sri Lankan Government in 2009.

TGTE twice held internationally supervised elections among Tamils around the world to elect 132 Members of Parliament. It has two chambers of Parliament: The House of Representatives and Senate and a Cabinet. It held its Parliamentary sittings among other places in the British and French Parliaments.

TGTE is leading a campaign to realize Tamils' political aspirations through peaceful, democratic and diplomatic means. The Constitution of the TGTE mandates that it should realize its political objective only through peaceful means.

The Prime Minister of TGTE is Mr. Visuvanathan Rudrakumaran, a New York based lawyer.

For information contact: pmo@tgte.org

**BACKGROUND:**
Tamils in the island of Sri Lanka faced repeated mass killings in 1958, 1977, and 1983 and the mass killings in 2009 prompted UN Secretary General Ban Ki-moon to appoint a Panel of Experts to report on the scale of the killings.

According to UN internal review report on Sri Lanka, over 70,000 Tamils were killed in six months in early 2009 and Tamil women were sexually assaulted and raped by the Sri Lankan Security forces. There are over 90,000 Tamil war widows and thousands of Tamils disappeared due the conflict.

According to this UN report, the killings and other abuses that took place amount to war crimes and crimes against humanity. Independent experts believe that there are elements of these abuses that constitute an act of genocide.

Members of the Sri Lankan security forces are almost exclusively from the Sinhalese community and the victims are all from the Tamil community. A Buddhist Monk shot and killed a Sri Lankan Prime Minister 1959 for having talks with Tamils.

Tamils overwhelmingly voted in a Parliamentary election in 1977 to establish an independent and sovereign country called Tamil Eelam. This Parliamentary election was conducted by the Sri Lankan Government.

Transnational Government of Tamil Eelam
TGTE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாப்பிலவு மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கல்



கேப்பாபுலவு
20/01/2018

T.R.T
வானொலி
பிரான்ஸ்

நன்றி நவிலலும் நன்கொடை பெறுதலும்

கேப்பாபுலவு பூர்வீக மக்களாகிய நாம் எமது பூர்வீக வாழ்விடம் கோரி 329 நாட்களாக வீதி வாசல் [illegible] உரிமைகளிலிருந்து எமது பூர்வீகம் கோரி போராடும் நாம் படும் அனுபவிக்கும் துன்ப துயரங்களை T.R.T வானொலி ஊடாக [illegible] அமைப்பினூடாக சர்வ தேசத்திற்கு எடுத்தியம்பிய T.R.T வானொலி பிரான்ஸ் ஊடகத்திற்கு முதற்கண் எங்கள் இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன். [illegible] பகலாக போராடி வரும் எமது சீவனோபாய நிலைமை மீது கருணை கூர்ந்து 10 மூடை அரிசி வழங்க முன்வந்த T.R.T வானொலி [illegible] அமைப்பிற்கு மீண்டும் எம் மக்கள் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை எமது போராட்டத்தின் தளராத உறுதிப் பாங்கினால் எமது பூர்வீக வாழ்விடத்தில் ஒரு தொகுதி காணி கடந்த 01.01.2018 அன்று நாம் பெற்றும் நாம் [illegible] 138 குடும்பங்களின் வாழ்விடம் விடும் வரை எமது போராட்டத்தை கைவிட மாட்டோம் என்ற உறுதிக் கொள்கைக்கு இணங்க [illegible] மக்கள் அனைவரும் சேர்ந்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம் மீதிக் காணிகள் மீதி 104 குடும்பங்கள் [illegible] வரை தொடரும் எமது போராட்டத்திற்கு T.R.T. வானொலியூடாக எமது நிலையறிந்து சகல புலம்பெயர் மக்கள் சீவனோபாய உதவிகள் வழங்குவதோடு எமது நியாய உரிமைப் போருக்கு [illegible]

[illegible] என கேட்டு நிற்கின்றோம். அதேவேளை T.R.T வானொலி ஊடாக [illegible] அமைப்பினூடாக எமக்கு [illegible] 10 மூடை அரிசியில் எமது நாளாந்த தேவை உணவுப் பொருட்கள் இல்லாத பட்சத்தில் 5 மூடை அரிசியும் மீதி 5 மூடை அரிசிக்கு பெறுமதிக்கு தேவை உணவுப் பொருட்களை [illegible] மேலும் உதவிகளை எதிர்பார்த்து கேப்பாபுலவு பூர்வீக மக்கள் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்

"நன்றி"

இங்ஙனம்
உண்மையுள்ள
[illegible]

T.R.T வானொலியின் அழைப்பாளர் ஊடாக இலண்டனை சேர்ந்த Dr ரவி - பார்வை பத்மினி, மற்றும் புஸ்பவதி திலநாதன் ஆகியோருக்கு கேப்பாபுலவு மக்கள் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். எமக்கு உலர் உணவு வழங்கியமைக்காக

இங்ஙனம்
S. [illegible]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Silverline
FINANCIAL SERVICES

# No fee mortgage advice.

◆ New Purchase ◆ Re-Mortgage ◆ Buy to Let ◆ Life Cover
◆ Income Protection ◆ General Insurance
◆ Critical Illness Cover ◆ Bridging Loan

Our adviser can provide expert advice and offer a wide range of mortgage products to suit you.

428 Rayners Lane, Pinner, HA5 5DX
020 8421 4073
info@silverlinefs.com

Your home may be repossessed if you do not keep up with the payment on your mortgage.

SILVERLINE FINANCIAL SERVICES LTD REGISTERED IN ENGLAND 09450952, WHICH IS AUTHORISED AND REGULATED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY

GOT A PROPERTY TO LET
0%
MANAGEMENT FEES
FOR 6 MONTHS

GOT A PROPERTY TO SELL
0.75%
SALE
COMMISSION

- உங்கள் வீடு கடைகள் போன்றவற்றை அதிக விலையில் விற்கவும், உத்தரவாத வாடகைக்கு கொடுக்கவும் எம்மை அழையுங்கள்.
- எமது 12 வருட அனுபவத்தின் பயனை நீங்களும் அடைய உங்களுடைய வர்த்தக நிலையங்கள், குடியிருப்பு வீடுகள் (FLAT) என்பனவற்றின் விபரங்களை எமக்குத் தெரியப் படுத்தினால் நாம் அவை தொடர்பான தேவைகளை உடனடியாக ஏற்பாடு செய்து தருவோம்.
- வீட்டு உரிமையாளர்கள், வாடகைக் குடியிருப்பவர்கள், ஏற்கனவே சொத்துக்களை எம்மூலம் விற்பனை செய்தவர்களுக்கும் எம்மூலம் வாடகைக்கு கொடுத்தவர்களுக்கும் வாடிக்கையாளர் களின் நம்பிம்மையைப் பெற்ற நிறுவனமாக நாம் இருப்பது பெருமைக்குரிய விடயம்.

எனவே நீங்களும் எம்மை அழையுங்கள்:

- Do you want to sell your property?
- Do you want to rent your flat or house?
- 12 year experience in property – Estate Agency
- We can provide rent guarantee with your letting properties
- We will achieve the best price for your property
- You call us for your solution

# Kronos
ESTATE AGENTS

0208 00 444 77

www.kronosestates.co.uk, 28 Rayners Lane, Pinner, HA5 5DX


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org